[illegible]

[illegible] 8 [illegible]

May 1935


8002N, N27SN
N35·8·10;
186951

1464

1464

REGD. No. M. 2302.

21 JUN 1935
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF ...
26 JUN 1935
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௪. § பலவான்குடி—யுவ—வைகாசி § திங்கள் ௰.


| எண் | உள்ளுறை | பக்கம். |
|---|---|---|
| 1. | வேந்தர் வெள்ளிவிழா வாழ்த்து | 229 |
| 2. | சிவநேசனுக்கு வாழ்த்து | 230 |
| 3. | திருத்தம் | 231 |
| 4. | சிவநேசனுக்கு மூலதனம் உதவிய திருவாளர்கள், | |
| 5. | வள்ளுவர் திருநாள் மாசி யுத்தரம் | 232 |
| 6. | ஊக்கமது கைவிடேல் | 233 |
| 7. | தெய்வமூர்த்த தத்துவார்த்தம் | 235 |
| 8. | யுவ ஆண்டு வாழ்த்து | 238 |
| 9. | பழந் தமிழ்ப் புலவர் வரலாறு | 239 |
| 10 | கவி இன்பம் | 245 |
| 11. | பிரதோஷ மகிமை | 253 |
| 12. | சுலோக பஞ்சக விஷயம் | 255 |
| 13. | மதிப்புரை மஞ்சரி | 257 |
| 14. | தேவிகாலோத்த ஆகமம் | (81—88) |


ஆசிரியர்:— ராம. து. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

**உள்ளூர்:**— குமார விநாயகர் திருக்கோயிலில் சித்திரை கஙஉ திருவோண நாள் நடராஜ ரபிடேகமும் சதய நாள் திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூஜை யும் சஉ நகரச் சிவாலத்தில் மூத்தபிள்ளையார் முருகவேளுடன் சந்திர சேகர திருவுலாவும் செய்யப்பெற்றன.

திருவாசக பாடசாலை மணிவாசக மன்றத்தில் சித்திரை உஙஉ வேந்த வெள்ளி விழா வன்று அண்ணாமலை பல்கலைக் கழக ஆசிரியர், பண்டிதமணி திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில் செந்தமிழ்ச் செல்வ களான தலைவரும் அ. மு. சரவணமுதலியாரும், வீ. குமாரவீரையரும் முறையே "கண்ணப்பர், திருநீலகண்டர், அன்பின் இலக்கணம்" என்னும் விரிவுரைகளாற் றினர். வைகாசி எஉ திருஞானசம்பந்த மூர்த்திகளின் குருபூசை நடைபெறும்

**துண்டுத்தாள்:**- க. ப. கரு. கருப்பன்செட்டியார் கையொப்பத் துண்டுத்தாள் காரைக்குடி குமரன் அச்சுப்பொறியில் அடிபட்டு வந்து பறந்தது. பலவானிதழ் மானநஷ்டவழக்கு என்றுதலைக்காட்டிற்று. உள்வயணத்தால் க. ப. கரு. கருப்பன் செட்டியார் மானநஷ்ட வழக்கு என்று காணக்கிடந்தது.

காகிதப் பஞ்சமில்லாத காலமானாலும் துண்டுத்தாளென்ற பெயருக் கிசைய வும் கிழிதலைப் பொருத்தி மானங் காப்பது மரபென்பதைக் கிளர்த்துவது போன்றும் இரண்டு துண்டுகளைப் பிணைத்து அடிக்கப்பட்டிருந்தது.

**குறிப்பு:**—மிதியடிக்கட்டையிலேறும் வீரரெனப்படுவார் சிலர்பட்டப்பகலில் வெட்டவெளியில் மானமின்றி வழியிலிருந்து மலஜலங்கழித்தலை யொழித்து மறைவு நாடி உபாதைகழித்து மானங்காப்பாராக.

**குன்றக்குடி:**— பிராமணர்களால் செ. கா. அன்னசத்திரத்தில் சித்திரை மாதத்தில் சங்கரஜயந்தி விழாவும் தனவணிக நகரத்தார்களின் அன்னதான மடத் தில் சித்திரை உளஉ முதல் ஐந்து நாளைப் பூஜை பல்லாயிரக் கணக்கான மக்க ளுக்கு பலவகைக் கறி குழம்பு பருப்பு நெய் பாயசங்களுடன் அமுதளித்து பிரா மணர், சைவர்களுக்கு அமுதுபடி காய்கறியாதிய வழங்கி வழக்கம்போல சிறப் பாகவும் நிறைவேறின. அன்னதானத்தைத் தினத்திட்டமாகச்செய்வது நலமெனப் பலர் கருதுகின்றனர். இம்மதி ஙஉ ஆறுமாமுகப்பிரான் வைசாக மண்டபப்படி யும் வெள்ளி ரதாரோகணமும் கொண்டருளினர். சிவஸ்ரீ சதாசிவக் குருக்க ளவர்களால் சஉ முதல் கூஉ வரை அந்தணர்; அடியவராதிய அன்பர்கட்கு அமு தருத்தியும் விரிவுரைகளாற்றியும் திருவுருவச் சித்திரத் திருவுலாச் செய்தும் முருகவேள் திருவவதாரத் திருவிழா நடைபெறுகிறது.

**பள்ளத்தூர்:**— ராவ்பகதூர், திருவாளர், உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியாரவர்கள் ஹைஸ்கூலில் மாட்சிமிக்க ஜார்ஜ் மன்னரின் வெள்ளி விழா நினைவுக் குறியாக உணவுச்சாலை யமைக்க இராமநாதபுரம் கலெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ K. ராமுண்ணி மேனன் அவர்கள் 1935 மே 12உ அஸ்திவாரக்கல் நாட்டி செட்டியாரவர்களால் விருந்துபசரிக்கப்பெற்றனர்.

**பரிமணக்குடி:**— சண்முகநாதர் திருக்கோயில் சஷ்டி சுவாமிகளால் பட்டுக் கோட்டையில் ஸ்ரீ முத்திராமலிங்க சுவாமிகள் சமாதியில் சித்திரை க௦உ வேலா யுதத் தாபக கும்பாபிடேகமும் பரிமணக்குடியில் சித்திரை உ௦உ கார்த்திகை தெய்வாராதனையும் சங்கமும் நடத்தப்பெற்றன.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.


| | | |
|---|---|---|
| ஆண்டு ௪ | யுவ—வைகாசி: 1935—மே | திங்கள் ௰. |


*உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி*
*அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்*
*அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்*
*முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.*

## வேந்தர் வெள்ளி விழா வாழ்த்து.

**மா**ட்சிமிக்க ஐந்தாம்ஜார்ஜ்மன்னர், 1865 சூன் 3உ பிறந்து வளர்ந்து பலகலைபயின்று 1893 சூலை 6உ மணமுடித்து, 1911 சூன் 22உ இந்திய சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்டு குடிகளால் யாதொரு குறைகளுங் கூறுதற்கிடனின்றி ஆட்சி புரிந்துவரும் இருபத்தைந்தாண்டு நிறைவை ஆங்கில நாட்டிலும், இந்தியா, இலங்கை, பர்மா, மலாயா முதலான பல நாடுகளிலும் 1935 மே 6உ தொடங்கித் குதூகலமாகக் கொண்டாடப்பெற்றது. அன்புடன் வாழ்த்துகள் கூறப்பெற்றன. அவர் தம் துணைவியாகிய மேதகு மேரி இராணியாருடனும் வெற்றி மிக்க வேல்ஸ் இளவரசராதிய நன்மக்களுடனும் நெடிது வாழத் தெய்வப் பிரார்த்தனைகள் செய்யப்பெற்றன. அந்தணர், தேவர், ஆனிரையாதிய வாழவும் மழை வளஞ் சிறக்கவும் தீமைகள் யாவுமொழிந்து மக்கள் துயர் நீங்கித் தெய்வங்கொள்கையுடையராய் இன்புற்றுத் திகழவும் உறுதுணையாய் நின்று வேந்தன் செங்கோல் செழித்தோங்க மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**கண்டராச்சிபுரம் திரு. அ. முத்தையப் பிள்ளை அவர்கள்.**

*சீரோங்கித் தேசஞ் செழித்தோங்கி யெஞ்ஞான்றுங்*
*காரோங்கி மென்மேலுங் காராளர்—ஏரோங்கி*

மேலாட்சி செய்வதுநம் வேந்தனைந் தாம்ஜார்ஜ—
கோலாட்சி செய்யுங் குணம்.

குணவாள னேழாவ தெட்வர்ட் புதல்வன் குலவியசீர்
மணவாளன் மேரிக்கு வாய்த்தவ னிந்தியா வாழுநருள்
பிணியாள ராலேர் பிரயாணஞ் செய்குநர் பெற்றிதருந்
தணவாத கல்வியைக் கற்போர்க்கு மிட்டனன் சாலைகளே.

மன்னு மாயிரத் துத்தொளா யிரத்துப்
பன்னொன் றில் மகுடம் பாங்குடன் புனைந்து
மக்க ணன்மையைக் கோரியெவ் விடத்தும்
நீதி செலுத்தும் மன்ற நிறுவியும்
ஞாயவா திகளை யமைத்து நல்கியும்
லோகல்பண்டு முதலிய வாட்சி யளித்தும்
வைகூரி தடுக்கும் மார்க்க மமைத்தும்
கல்விச் சாலைகளைக் கணக்கில வாக்கியும்
பல்பல விதத்தினும் பரிவுகூர்ந் திட்டமாய்
ஆட்சிசெய் தனனனி ஐயைந் தாண்டு
வரிபளு வெனச்சில குறையுள வாயினும்
"கொன்றன வின்ன செயினுமவர் செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்" என்பதனை
உன்னி மறப்ப துயர்ந்தோர் கடனே
ஐந்தாம் ஜார்ஜநம் மரசர்க் கின்றுள்
வெள்ளி விழாவினை வேட்டுக் கண்டனம்
பொன்விழா வைர விழாக்காண் பதற்கும்
பொற்சபை யென்னுஞ் சிற்சபை நடிக்கும்
அற்புத மூர்த்தியி னருளினைக் கோருவம்
அரசனும் பேரி யரசியு மவர்க்கு
வரிசையாய்ப் பிறந்த மக்களும் வாழி
வாழி வாழிபல் லூழி
வாழி யிந்திய மக்களின் சீரே.

---

## சிவநேசனுக்கு வாழ்த்து

திருவாமாத்தூர், கௌமார மடாலயம்,
ஸ்ரீ திருப்புகழ்த் தண்டபாணி சுவாமி சந்நிதானம்,
சதுர்வேத சித்தாந்த சண்மத சமயாதீத அத்துவிதகௌமாரசபைத் தலைவர், திருவாளர்,
**தி. மு. செந்திநாயகம் பிள்ளை யவர்கள்.**

இருள் மிகுந்த இராக்காலத்தில் உலகினர் தூலப்பொருள்களையும் செல்வழியையும் இனிதுணர்ந்து கொள்ளுதற் குரிய

18695



உபசாதனமாக அரசியலாளர் ஒளி மிகுந்த பலவிதமான தீபங்களை நியமித்துள்ளார்கள். அவை, சூரியனது கிரணம் வெளிப்படும்வரை இன்றியமையாத் துணையாய் கொள்ளக் கிடத்தல் காண்கின்றோம். அது போன்று, நாத்திகம், உலகாயதம், அகம்பாவாத முதலியவற்றின் செறிவினால் உலகப் பொதுமனித வர்க்கத்தின ருள்ளங்களில் மூடி மறைக்கும் அறியாமை, விபரீதமொழி, தீச்செயலாதிய இருளைப் போக்கி அருட் சித்திகளை நடாத்திச் சைவப் பிரகாசத்தைப் பரப்புதற்குரிய ஆசாரியன் முன்னிலைப்படும்வரை, இன்றியமையாத் துணையாய் நின்று சிவநேசன் உரிமைத் தொண்டாற்றிப் பிரகாசிப்பதுநல்லோர் பலர்க்கும் பெருமகிழ்வளித்தற்பால தென்பது நிராக்ஷேபமாகும்.

சைவத்தொடு தமிழுஞ் செகத்தூடு தழைத்தினிதே
மெய்வர்த் தனையுற நற்பலவான்குடி மேவியன்பர்
கைவைத் துவக்குஞ் சிவநேசன் பத்திரிகைத்தலைமை
யுய்வைப் பெறக்கொண் டுளராமசாமி யுணர்ச்சிநன்றே.

**(பரிமணங்குடி, திரு. சஷ்டிச் சுவாமியவர்கள்.)**

செந்தமிழாற் சிவநேச னச்சிட்டொரு திங்களுக்கும்
வந்திடச்செய் துதவிப்பல வான்குடி வாழ்சுகுணன்
சந்ததம் ராம கு ராம ராமப்பெயர் தாங்குசெல்வன்
கந்தன் திரு வருளால் வாழிவாழி யெக்காலமுமே.

**(கரிசூழ்ந்தமங்கலம் ஸ்ரீ ஆனந்தகான சபையார்.)**

சநாதன தர்மத்திற்கும் சிவபக்தர்களுக்கும் தக்கவாறு தொண்டாற்றிவரும் சிவநேசன் பத்திரிகைக்கு யாதொரு குறைவும் நேராமல் நிறையருள் புரியும் வண்ணம் இறைசிவனாரின் இணையடிகளை இறைஞ்சுகின்றோம்.

---

## திருத்தம்.

ஆண்டு அ. 224-ம் பக்கத் தலைப்பில் "கருங்காலிக் கட்டைக்கு .........கண்" என்னும் வெண்பாவில் வாய் என்ற பதம் முதலிரண்டடிகளில் மிகையாகச் சேர்த்திருப்பனவற்றை விலக்கி விடுக.

---

**சிவநேசனுக்கு மூலதனம் உதவிய திருவாளர்கள்.**

கரூரு. உயர்திரு, காசிமடாலய கர்த்தாவர்கள்,
திருப்பனந்தாள்.

18695

உ

# வள்ளுவர் திருநாள் மாசியுத்தரமே.

## திருவள்ளுவர் திருநாட் கழகத்தலைவரீர்! அமைச்சரீர்!!

"திருவள்ளுவர் திருநாட் கழக அறிக்கை"யை சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கும் எட்டாம் ஆண்டுச் "சிவநேசன்" வெளியீடு பக்கம் 214, 215-ல் கண்டு யாம் மிக மிக வியப்புற்றோம்.

மாசியுத்திர தினமே திருவள்ளுவர் திருநாள் என்று காலமுணர் பழையாரோடனைவரும் நல்விழாக் கொண்டாடி வந்த தொன்மையாசாரவநுஷ்டான நல்வழக்கை மாற்ற ஒரு சிலர் கூறும் வைகாசி அனுடமென்னும் நூதன வழக்கத்தைக் கைகொள்ள "மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்" என்னுஞ் சீரிய மதிப்பினுக் கணிகலனான தமிழ்நாட்டிற் றமிழ்த்தாயுதரத்துட் ஜனித்து, அப்பெரியள் தன் இனிய பாலுண்டு வளர்ந்து தமிழ்ப் பயிற்சியினுமுயர்ந்த நீங்கள் நந்தமிழ்த்தாயின் சீரியதவப்புதல்வராம் திருவள்ளுவர் பெயரால் திருநாட்கழக விருந்து உவந்து தந்திருப்பதில் "ஆண்டுதோறும் வள்ளுவர் தந்திருநாளாய வைகாசி அனுடத்தன்று" வள்ளுவர் விழாக்கொண்டாட வேண்டுமென்றும், கொண்ட எண்ணங்கைகூடும் வண்ணம் நவக்கிரகங்கள் தோஷஞ் செய்யாதிருக்கும் நோக்கான் ஒன்பது சிறப்பான நோக்கங்களையும் வெளியிட்டுக்கொண்ட நுங்களின் சால்பிற்கியாது கைமாறு கிட்டுமோ யாமறிகிலேம்?

இத்திருவிழாவின் உண்மையை விரித்து நமது அருமைச் சிவநேசன் தன் நான்காவது ஐந்தாவது ஆண்டுகளில் ஆற்றிய விரியுரைகளும் அதுபற்றி மேற் சொன்ன ஒருசிலரான அனுடத்தினர் மறுப்பும் அன்னோர்பின் பதிலளிக்கச் சக்தியற்றுத் திண்டாடித் தியங்கி உயங்கி மயங்கி நின்ற நிலையும், துண்டுப் பிரசுரங்கள் பலவானவைகளும் கண்டாரனைவரும் அழியாப்பேரின்பங் கருதித் திருவள்ளுவரின் உண்மைத் திருநாளை மாசி உத்திர தினமென்றே கண்ணினுள் திகழும் கருமணி போலக் கருதிச் சிலாகித்துக்கொண்டாடி வருகின்றனர்.

ஆகலின் அவ்வுயரிய திருவள்ளுவர் தந்திருநாளை, இவ்வாண்டுமுதல் வருடந்தோறும், மாசி உத்திர தினத்தன்றே, திருவிழாக் கொண்டாடுதற்கான முறைகளைத் தேர்ந்து அமைப்பதற்காக நுங்கள் கழகம் கூட்டப்பெற்றால், அதில் ஆன்றோர் பலர் உவந்து வந்து கூடி உறுப்பினராய்ச்சேர்ந்து நீடூழிகாலம் கழகமும் அதன் உறுப்பினர் முதலனைவரும் வாழ ஏதுவாகும்.

முத்திப் பேற்றிற்கு முதன்மையாய்த் திகழுமன்வரும் நம்மனோர் நல்நிலையடைய மறுவழிபுகாது தொன்மை உண்மைத் தினமாய மாசி உத்திர தினத்தையே மறவாது திருவள்ளுவர் திருநாளாகக் கையாண்டு அவ்விழாவை நடைபெறும்படி தவிராது ஏற்பாடுசெய்ய நுங்கள் கோரிக்கைக் கழகத்தைக் கூட்டுவிக்க அக்கழகத் தலைவரவர்களையும், அமைச்சரவர்களையும் பன்முறை வேண்டா நிற்கின்றோம்.

இவையாவும் இனிதே நடைபெற்று இறைவன் இணையடி நீழலையடைய அவ் விறைவன் இன்னருள் புரியுமாறு மனமொழி மெய்களால் அவனிணையடி யிறைஞ்சாநிற்கின்றோம்.

சிவசூரியநாராயண பிள்ளை, பஞ்சாங்கக்கணிதர், இட்டமொழி.

உ

# ஊக்கமது கைவிடேல்.

(காஞ்சீபுரம் சைவபுராணிகர், திரு. அ. க. பொன்னுசாமி முதலியாரவர்கள்.)

இது ஔவையாரமுதமொழி. செய்தொழிலில்மனத்தளர்ச்சியுற்றுக்கைநெகிழவிடப்படா தென்பது இதன்பொருள். மனவூக்கத்துடன் செய்யுந்தொழிலின் முயற்சி ஒருசமயம் பயனுறாததுபற்றிப் பின்னிடையாது மீண்டும்அத்தொழில்செய்தற்கட்கிளர்ச்சியேமேன்மையுற்றதென வற்புறுத்தும் வண்ணம் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்று பெரியோர்கூறுவர். முயற்சியின்றி யெப்பயனுங் கைகூடாதென்பதை நாம் அனுபவத்தா லறிகிறோம். ஆனது பற்றி ஒரு பயனைவிரும்புவோர்க்குமுயற்சி இன்றியமையாதது. ஆனாலும் முயற்சி யொருகாற் பயனளித்தும் மற்றொருகாற் பயனளிக்காமல் வீணாகவுங்காண்கிறோமே என்னையெனின், பிரதிபந்தமாகிய பழவினையும், வினைசெயற்கண் கடவுளை அகமுறவழி படுதலின்மையுமே பயனெழாக்காரணங்களெனத் திண்ணமாகவுணரலாம். உரத்துடன் சோர்வின்றி ஓர் முயற்சியைப் பன்முறை புரிவதற்கு மனவலியென்றும் அவசியமுள்ளதாகையால் கைகால் முதலிய உறுப்புக்களா லியற்றப்படும் முயற்சியினும் உள்ளத்தின் உயர்ந்த பண்பாகியவூக்கமே மேம்பாடுடையதாகும். இதனால் தான் ஔவைபெம்மனை மற்றொருமுறை "ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு" என்றனர். பரிமேலழகரும் ஊக்கமுடைமைக்கு மனம் மெலிதலின்றி வினைசெய்தற் கட்கிளர்ச்சியுடைத்தாதல் என்று இலக்கணங்கூறினர். உடல்வலி கூரியமதி நற்கேள்வி பொருள்மிகுதி இவையாவும் பொருந்திய வொருவனுக்கு ஊக்கமுடைமையில்லையாயின் அவன் பெற்ற அப் பேறுகளனைத்தும் சுகம் பயவாமல் பயனற்றவைகளாய் முடியுமென்பதற்குப் பலவுதாரணங்களுண்டு. மேற்சொன்ன பேறுகளொன்றும் பெறாதவொருவன் ஊக்கத்தின் வலிமையால் இவ்வுலகில் எல்லாச் சுகங்களையும்பெற்று மறுமைப் பேற்றையும் பெறுவான் என்பதற்கும் பலவுதாரணங்களுண்டு.

"உடையரெனப்படுவ தூக்கமஃதில்லா ருடையதுடைய ரோமற்று."

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லுமசைவிலா வூக்க முடையா னுழை"

"பரியது கூர்ங்கோட்ட தாயினும்யானை
வெரூஉம் புலிதாக்குறின்"

என்பன திருவள்ளுவர் திருவாக்குகள்.

யானையானது உருவத்தால் பெரியதாயிருந்தும்கூர்மையான கொம்புடையதாயிருந்தும் ஊக்கமின்மையால் சிறியவடிவமுடைய புலிக்கஞ்சும்.

"உலையா முயற்சிகளை களைவூழின்
வலிசிந்தும் வன்மையுமுண்டே—உலகறியப்
பான்முளை தின்றுமறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங்கரி" என, குமரகுருபரர்

அருளியபடி பின்னிடையா ஊக்கத்தால் கடவுளருள்வாய்ந்து தன்னுயிர்கவரவந்த மறலியையும்வென்று என்று மிறவா நிலைபெற்றனர் மார்க்கண்டேயர்.

இளைய சம்சாரத்தின் மாயவலைப்பட்ட உத்தான பாதன் தன் குமாரனை துருவனைச் சிம்மாதனமேறாமல் தடுத்தகாரணத்தால் வயதிற் சிறியவத் துருவன் செய் தவமுயற்சியால் சந்திர சூரியருடன் வைத்து எண்ணப்படும் அழியாத துருவ பதத்தையடைந்தனன். கபிலர் சாபத்தால் சாம்பரானசகரர் அறுபதினாயிரம்பேர்தம் மூதாதைகளென்று கேள்விப்பட்டபகீரதன்பெருந்தவஞ் செய்து கங்கையைப் பூமியிற்கொணர்ந்து மூதாதைகளின் என்பிற் சேர்த்து அவர்களைச் சுவர்க்கலோகஞ்சேர்த்ததுடன் இன்னும் அக்கங்கையிற் படிபவர்களெல்லாம் நலமடையச் செய்துள்ளான். நளன் குலத்துதித்தநளாயனிமௌத்கல்யருக்கு வாழ்க்கைத்துணைவியாகி அம்முனிவர் அவள் கற்பைப் பரிசோதிக்க காலத்தில் தேவர்களை யெல்லாம் எழுந்தருளச்செய்து சூரிய உதயத்தைப் பலநாள் நிறுத்திப் பதி விரதத்தை நிலைநாட்டித் தன்வார்த்தையால் சூரியனை உதிக்கச்செய்து தன்னாயகனின் குட்டரோகத்தை நீக்கி உலகமுள்ளளவரையில் தன் புகழைநிலைநாட்டினள். ஆயுள் குன்றிய சத்தியவானை மணந்த சாவித்திரி மிடிமைநிறைந்த அவனிடத்து நெறி வழுவாது ஒழுக்கம்பூண்டு தவவலிமையால் கணவனுயிர் கொள்ளவந்த நடுவனையும் தன்சொற்படி நடக்கச்செய்து தன்கணவனுக்கு நிறைந்த ஆயுளும் செல்வமும் பெற்றதுடன் கண்ணிழந்த மாமன் மாமிகளுக்குக்கண்தெரியும்படியும்வரம்பெற்று அரசியலையும் தன் கணவனுக்குப் பெற்றளித்தனள். கலிபுருடன் சூழ்ச்சியால் அரசிழந்து தன்னையுங்கானகத்தில் விட்டகன்ற நளன் மனைவி தமயந்தி, அறநெறியே நெறியாகக்கொண்டு தன்தாதைபால் வந்தமர்ந்து ஆக்கமிழந்தோமென்ற சதியுறாமல் கணவனைத் தன்தந்தை பக்கல் வருவித்து அவனிடுக்கண்களைந்து பழைய அரசியலையடையச் செய்தனள். "வெள்ளத்தனைய விடும்பையறிவுடையா னுள்ளத்தி னுள்ளக்கெடும்" என்றபடி அறிவுடையார்கள் மனவூக்கத்தினால் எவற்றையும்வென்று நன்மையடைவரென்பது நிச்சயம். மேலே சொல்லிய ஆடவர்மூவரும் பெண்கள் மூவரும் ஊக்கமுடைமையால் நலம்பெற்றமை வெள்ளிடையாதலால் இறைவன் திருவருட்டுணை கொண்டு அவனைவழிபட்டு ஊக்கமுடையராய் முயன்றவைமுடித்து நலமடைவோமாக!

---

உ

# தெய்வ மூர்த்த தத்துவார்த்தம்.

(காஞ்சீபுரம், திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்)

(சிவநேசன் ஆண்டு 8-170-ம் பக்கத் தொடர்ச்சி.)

## சோமாஸ் கந்த மூர்த்தம்.

திவ்யமங்கள தேஜோமயமாய் விளங்கும் சிவபெருமான், ஆன்மகோடிகளுய்வான் கொண்டருளிய திருமூர்த்தங்கள் இருபானைந்தென்ப. இவற்றுள் "சோமாஸ் கந்த" மூர்த்தமு மொன்று. இது நமது சைவப்பெருங் கடவுளாகிய ஸ்ரீ சிவபெருமானும் உமா தேவியாரும் முருகக் கடவுளைத் தழுவிய அவசரம். ஒரு பால் சிவபெருமானும், வாம பாகத்தில் உமாதேவியாரும், அமர்ந்தகோலமாயிருப்ப, நடுவண் ஸ்கந்த மூர்த்தியானவர் வீற்றிருந்தருளும் திவ்யதிருக்கோலம். சூரபதுமனாதியசுரர்களினிம்சைக் காற்றாச் சுரர்களின் வேண்டுகோட் கிசைந்து, ஐமுகக் கடவுள் அறுமுகத்தோடிருந்து, தமது நெற்றி நாட்டத்தின் மிசைத்தோன்றும் அறுபொறிகளின் வாயிலாய் சரவணத்தில் ஸ்கந்தமூர்த்தியை நல்கினர். அதன்பின் பார்வதிதேவியாரின் பாதச்சிலம்பிற் சிதறுண்ட நவமணிகளின் வாயிலாய்த் தோன்றும் நவசத்திகளினிடமாக ஸ்கந்தனனுசர்களாகவும், சேனைத் தலைவர்களாகவும், வீரர்களாகவும், வீரவாகு தேவர்முதலா இலக்கத் தொன்பதின்மர்களைத் தோற்றுவித்தனர். சரவணத்தில் ஆறுகுழவிகளாய் வளரும் ஸ்கந்த மூர்த்தியைக் கைலாயத்திற்குக் கொண்டுவரக் கருதி, சிவபெருமான் உமையோடு இடபமூர்ந்து சரவணப் பொய்கையை யடைந்து ஆறுகுழந்தைகளையும் உமாதேவியார், ஒருங்கு சேர்த்தெடுக்க, ஆறு திருமுகமும் பன்னிருதிருக் கரங்களும் கூடிய ஒரு திருவடிவுடன் இரண்டு திருவடியுடையராய் ஸ்கந்தமூர்த்தியானவர் விளங்கினர். பின்னர் அவ்விளங் குமரனைப் பார்வதியாரும் பரமனும் ரிஷப வாகனத்தின்மீது தங்களிருவருக்கும் நடுவண் வைக அமைத்துக் கைலாயஞ் சென்றனர். "ஏலவார் குழலிறைவிக்கும் எப்பிரான் றனக்கும், பாலனாகிய குமர வேணடுவுறும் பான்மை" யோடுவிளங்கிய வித் திருக்கோலமே "சோமாஸ் கந்த மூர்த்தம்" (ஸ—உமா—ஸ்கந்தர்) என்றது சோமாஸ் கந்தரென்றாயிற்று. புத்திரப் பேற்றை விரும்பினோரும் இல்லறவொழுக்கத்தை மேற்கொண்டொழுகுவோரும், இம் மூர்த்தத்தை விதிப்படி பூஜித்துப்பயனடையக் கடவர். ஞான சத்திதராகிய முருகன்நடுவண் விளங்கலால் மோட்ச செல்வத்தைக்

காதலிக்கும் அறிவு சான்றஞானிகளும் இம்மூர்த்தியின் வழிபாடே சாலச்சிறந்ததெனக்கொள்கின்றனர். இதனுயர்வுநோக்கியே நந்தேவாலயங்கடோறும் இச்சோமாஸ்கந்த மூர்த்தத்தைப் பிரதானமாகக் கொண்டுஉற்சவாதிகள் நடத்துவதும்விழுமிதாகவழிபாடுசெய்வதுங் காண்க. சைவர்கள் இதனையே பெரிதும் ஆத்மார்த்த வழிபடு கடவுளாய்க் கொள்கின்றனர். இம் மூர்த்திவழிபாட்டானே இருமையுமடைதல் திண்ணமென்பது நூற் பிரமாணம். திருமால், ஆதிசேடன், இந்திரன், முசுகுந்தன் முதலிய பலதேவர்களும் அரசர்களும் இம்மூர்த்தத்தைப் பூஜித்துப் பேறு பெற்றிருக்கின்றனர்.

பண்டொருபகல் விஷ்ணு மூர்த்தியானவர் புத்திரப் பேறு வேண்டிச் சிவனை நோக்கிப் பெருந்தவங் கிடக்க, பெருமான் உமாதேவியாரோ டெழுந்தருளி வந்து காட்சி கொடுத்தருளலும், கண்ணன்கண்ணுதற் கடவுளை மட்டும் வணங்கி வழிபாடு செய்து புத்திரப்பேற்றைவேண்ட, பிஞ்ஞகனும் அவ்வாறேதந்தருளினார். தன்னை வழிபாடுசெய்யாத விண்டுவை நோக்கி "கருநிறக் கள்வனே! எம்மை வணங்காது அவமதித்தனையாதலால் மாதேவனிடம் வரத்தால் பெற்ற அப்புத்திரன், அக்கடவுளாலேயே அழிந்துபோகக் கடவன்" என்றுஉமாதேவியார் சபித்தனர். உடனே விஷ்ணுவானவர் பயந்து பரமசிவனையும் பார்வதிதேவியாரையும் அவரதுதிருக் குமாரராகிய ஸ்கந்த மூர்த்தியையும் விதிப்படிஸ்தாபித்து (சோமாஸ்கந்த மூர்த்தமாக) வணங்கி நெடுங்காலம் ஆத்மார்த்தவழிபாடு செய்து தவங்கிடந்தனர். பின்னர் மழுவிடைமேல் மாதோர் பாகன் மலைமகளோடு காட்சியளித்தனர். இப்போது திகிரியான், முன்திகில் மனதில் தோன்ற முதன் முதலாக உமாதேவியாரையும் பிறகு முக்கணிறைவரையும் வழிபாடு செய்து தோத்திரித்து நின்றனர். அப்போது உமாதேவியார் கருணை சுரந்து "விஷ்ணுவே, பரமன் பாலித்த வரமும், யாம் கொடுத்த சாபமும், தவறாதாகையால் அவ்வாறழிந்த உன் புத்திரன் மீண்டும், உயிர் பெற்றிருக்கக் கடவன்" என்று வரமளித்து மறைந்தனர். பிற்பட்ட காலங்களில், அவ்வாறே மன்மதன் விண்டுவுக்கு மகவாய்த் தோன்றிச் சிவனார் நெற்றி விழியா லெரிக்கப்பட்டு, இரதி வேண்டுகோளால் மீண்டுமுயிர்பெற்று அனங்கனாய் இன்றும் விளங்குவதாயினன். பிறகு விஷ்ணுவானார் திருப்பாற் கடலை யடைந்து தாம் பூஜித்த அம்மூவரையும், தனது மார்பினிடத்தில் வைத்துக்கொண்டு அறிதுயிலமர்ந்தனர். இதனை,

"நிற்பமற் றித்திற நேமியான் முன்னைநாள்
அற்புடன் வழிபடு மமலையைக் குமரனைத்
தற்பரக் கடவுளைத் தனதுமார் பிற்கொடே
பற்பகல் பணியின்மேற் பாற்கடல் துஞ்சினன்"



என்னும் பாசுரத்தானறிக.

இஃதிங்ஙனமாக தேவேந்திரன், வற்கலன் என்னு மசுரனொருவனால் துன்பப்பட்டு விஷ்ணுவையடைய, அவர் தாம் பூஜித்த "சோமாஸ் கந்த" மூர்த்தியையளிக்க, அதன் பூஜாவிசேடத்தினால் மகபதி தன் மாற்றலனை வென்று சற்புத்திரப் பேற்றையுமடைந்தனன். இதனை,

"பார்த்தியா லெனதெனும் பைம்பொன் மார்பத்திடை
மூர்த்தியாய் வைகிய முதல்வியைக் குமரனைத்
தீர்த்தனைப் பூசனை செய்துநின் தீவினை
யார்த்திநீங் குதியென வாதரத் தருளினன்"

என்னுஞ் செய்யுளா னறிக.

பன்னெடும் நாளிம் மூர்த்தம் அவன்பாலேயிருந்தது. பின்பொருகால், வலன் என்னுமசுரனால் தேவேந்திரனுக்கு இடுக்கண் நேர முசுகுந்தச் சக்கரவர்த்தியை யடைந்து வீரவாகு முதலிய நவவீரர்களொன்பதின்மரைப் படைத்துணையாகப் பெற்று, அசுரனை வென்று இன்னல்நீங்கி மனமகிழ்ந்தஇந்திரன், முசுகுந்தனைநோக்கி "பூவரசரேறே! நின்படைவலியால் வெற்றியுற்றனன். நிற்குவேண்டிய தறைதி! ஈவல்" என்றனன். பொன்னகரைவிட்டுப்புவிக்கண்வர விரும்பிய தியாகராஜப் பெருமான் முசுகுந்த மன்னனை நோக்கித் தன்னைக்கேட்கும் படி குறிப்பாலுணர்த்த, அவ்வண்ணமே முசுகுந்தன் அச்சோமாஸ் கந்த மூர்த்தியாகிய தியாகரைத் தரும்படி கேட்டனன். தன் ஆத்மார்த்த மூர்த்தியைக் கொடுக்கமனமிசையாமல் நரபதியை வஞ்சிக்க வெண்ணி விசுவ கருமாவைக்கொண்டு, அம்மூர்த்தியைப் போலவே பேதமில்லாமல் வேறு ஆறு மூர்த்திகளைச் செய்வித்து, சப்த தியாகரையும் ஒரே வரிசையில் வைத்து மண்ணுலகமன்னனை நோக்கி விரும்பிய மூர்த்தியைக் கொள்ளுமாறு கட்டளையிட்டனன். தேவர்கோமகன சூட்சியறியா மன்னன் தியாகப் பெருமான் திருவருட் டுணையால் திருமால் பூஜித்த ஆதித் தியாகரையே தேர்ந்தெடுத்தனன். இந்திரன், மற்றேனைய ஆறு மூர்த்திகளையு மவனிடமே ஒப்படைத்து விட்டனன். அவ்வேழு மூர்த்தங்களையும் முசுமுகன் சப்தவிடங்கத் தலங்களாகிய திருவாரூர், திருநள்ளாறு, திருவாய்மூர், திருக்காராயில், திருநாகைக்காரோணம், திருக்கோளிலி, திருமறைக்காடு என்னும் ஏழு தலங்களில் பிரதிஷ்டை செய்வித்து, தேர், திருவிழா நித்திய நைவேத்திய பூஜை ஆதிய குறைவின்றி நடந்துவரச்செய்து ஈற்றில் சிவபதமடைந்தாரென்பது சரித்திரம். இதனை,

"அந்நாட்டமிழ்க்குத்தூது சென்ற ஆதிக்கடவு ளணியாரூர்
பொன்னாட்டினுக்கு மதிகமென்றே போந்தா ரிதஞ்சேற்
புகழுண்டோ" என்னுஞ் சோழ மண்டல சதகத்தானும்,

"பூவசஞ் செய்து விண்ணொடு புணர்பகை போக்கியவோர்
கோவசஞ்செய வளாரூர்த் தியாகர்"

என்னும் திருவாரூர் ஒரு துறைக்கோவையாசிரியர் வாக்கானு மறிக.

இம்மூர்த்தம் ஸ்திரீ புஞ்சவடிவா யமைந்திருத்தலின், அவன் அவள் அது என்னும் உலகிலுள்ள எவைக்கும், எவர்க்கும் பொது நிலைமையையும் குமாரக்கடவுள் சகிதராய், அம்மையாருடன் வீற்றிருத்தலின் புத்திரப்பேற்றை யளிக்கவல்லவர் என்பதையும், சந்திரனைத்தரித்திருத்தலினால் தூமதியுடையவர் எல்லாமறிபவர் (சருவஞ்ஞத்துவர்) என்பதையும், கங்கையையணிந்திருப்பதால் தண்ணருட் பெருக்குடையவர் என்பதையும், மானேந்திவிளங்கலால் மான்போல் தாவுகின்ற மனத்தையடக்கவல்லவர் தாமென்பதையும், நான்கு வேதத்திற்கும் தலைவர் தாமென்பதையும், தமருகமுஞ் சர்ப்பமுந் தாங்கி யிருத்தலினால் சுத்தாசுத்த அத்துவாவைப் பிரவர்த்திக்குங் குணத்தினையுடைய, பிரணவ வொலி போன்ற தமருகத்தின் ஒலியாகிய நாததத்துவத்தால் உலகை ரட்சிப்பவர் தாமென்பதையும், சர்ப்பவடிவாகிய குண்டலி சத்தியின் விரிவு சுருக்கங்களே பிரபஞ்ச ஒடுக்கத்தோற்றம் என்பதையும், அதற்குக்காரண பூதர் தாமென்பதையும், வரதாபயங்கொண்டிருத்தல் ஆன்மாக்களின் கன்மத்துக்கீடாய்ப் போகமுத்திகளை யளிப்பவர் தாமென்பதையுங் குறிப்பனவாம். இம்மூர்த்தத்தின் பெருமையும் தத்துவார்த்தங்களும் அளவுகடந்தன. கற்றறிந்தமேலவர் பலவாறுகச் சிறப்பித்துக் கூறுவர், இத்தகையுயர் மாண்பினதாயுள்ள உண்மையறிவானந்த வுருவை உள்ளன்போடு வணங்கி வழிபட்டு இம்மை நலனும் மறுமையின்பமும் பெற்று நீடூழிவாழ்வோமாக.

## யுவ ஆண்டு வாழ்த்து.

(பரிமணங்குடி திரு. ஈஷ்டிச் சுவாமியவர்கள்)

கார்பொழியச் சேமகர மோங்க வெஞ்ஞான்றுஞ்
சீர்பெருகச் சைவமுடன் செந்தமிழும்—பாரில்
யுவவாண் டுதிப்ப வுதவி யருளீசன்
றவபால காதனை நாதா.

உ

# பழந் தமிழ்ப் புலவர் வரலாறு.

(திருமயிலை, திரு. மு. சுந்தரவடிவேலன் அவர்கள்)

எவ்வுயிரும் நீங்கா துறையு மிறைசிவ னென்று
எவ்வுயிருக்கும் அன்பா யிரு.

## புலவர் துதி.

கூடனகர்ச் சங்கத்தார் சிரமசைக்கக்
குலவுதில்லை யான்பொற்கா சளிக்கக் கந்தன்
பாடல் பகரெனக் கேட்கக் கம்பருலாப்பாட
பண்மையுநீ கண்டுரைக்கக் குகன்கோயி லமைக்கப்
பீடமையுந் தணிகைமான் மியங்காந்தக் காண்டம்
பிறங்கிய வாசிட்டவுரை பெருக்கிக் கூற
நீடருள்சேர் கவிவாணர் முதற் செங்குந்த
நெறிமரபோர் திருவடி கணினைந்து வாழ்வாம்.

## தோற்றுவாய்.

காலையில் சூரியன் கிழக்கில் உதயமாகும் பொழுது ஓர் மலையடிவாரத்தி னின்று விரைந்து வெளிக் கிளம்பும் மகா பிரகாசமான அவனது சொரூபமும் அவனது கிரணங்கள் அருவிகளிலோடும் புனலிற் படுங்கால் அப்புனல் பளீர் பளீரென்ற பிரகாசத்தை வீசிப் பார்ப்பவர் கண்களை பறிக்கின்றன என்றும், நீலபடாம் விரித்தாலன்ன நீலவானமத்தியில் வான்மீன்களான முத்துப் பந்தரின் கீழ் மதகஜமென்ன மலையடிவாரத்தில் போர்வை பூண்ட மரகதப் பாய் விரித்தாலன்ன மேகந்தவழும் பச்சைப் பசுஞ் சோலை என்றும் இன்னோரன்ன பிறவற்றைச் செஞ்சொல்லோவியத்தால் அணிபெற அமைத்துப் பாடி இயற்கைநலங் குன்றிச்செயற்கையில் செம்மாந்து கிடக்கும் எம்போலியர்களை யெல்லாம் இயற்கை எழிற் சோலையில் சிறிது காலமாயினும் இருத்தித் திளைக்கச் செய்பவர்கள் ஒப்புமிக்குமில்லாத் திப்பிய செழுங்கனித் தீஞ்சுவை சொட்டும் செந்தமிழ்ச் சொல்லோவியப் புலவர்களே யாவர். அத்தகைய பழந் தமிழ் நற்குடிமக்கள்பா லுதித்த மாபெரும் புலவர்களுள் பொய்யா மொழிப் புலவர், படிக்காசுப் புலவர், பகழிக் கூத்தர், இரட்டையர்கள், காங்கேயர், சிதம்பர சுவாமிகள், கச்சியப்ப முனிவர், குகனேரியப்ப நாவலர், அருணாசல சுவாமிகள் ஆகிய இவர்கள் சிறப்படைந்தோராவர். எனவே, தமிழ்நாடு செய்த தவக்குறைவாலோ மற்றெக் காரணத்தாலோ இவர்கள் உண்மை வரலாறு முழுவதும் கிடைக்கப்

பெருமையினாலும் அழுக்காறு முதலான தூர்க்குணங்களினால் அப் புலவர்களின் ஒழுக்கம், கல்வி முதலானவைகளுக்கு விரோதமாகத் திருத்தியும் கூட்டியும் குறைத்தும் எழுதப்பட்டு வழங்கி வந்தமை யாலும் தமிழ் நாவலர் சரிதை, சோழமண்டல சதகம் என்பன போன்ற சில நூற்களைக் கொண்டு ஆய்ந்ததன் பயனாக மேற்கூறிய புலவர் பெருமக்கள் வரலாறுகளை ஒவ்வொன்றாக வரன்முறையாக சமயம் நேர்ந்துழி இச்சீரிய "சிவநேசன்" வாயிலாக வெளியிடத் துணிந்தனம். உலகம் பிழை பொறுக்க.

## பொய்யாமொழிப் புலவர்.

இப்புலவர் இற்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரம் வருடங் களுக்கு முன் இருந்தவர் என்று இவர் காலத்திருந்த திருத்தக்க தேவரின் கால நிர்ணயத்தைக் கொண்டு ஒருவாறு நிலை நிறுத்து கின்றனர் கால ஆராய்ச்சியாளர். இவர் எக்குலத்திலுதித்தார் என்பதைத் தக்க இரண்டொரு ஆதாரங்கள் காட்டாமலே மனம் சென்ற வழியே குலத்தைக் குறிப்பிடுவது தகுந்த நியாய மன்றாம். இவ்வியாசத்தின் முகப்பில் கூறிய புலவர் வாழ்த்துக்கவியானும்,

உரமசைத்தார் கவிசூழ்புவியாளும் மூசிதன் முன்னாள்
கரமசைந் தார்ப்பப் புனலமிழ்சங்கக் கவின்பலகை
வரமசைத்தும்பர் வயங்கவு மற்றதில் வாழ்புலவர்
சிரமசைத் தொன்றவும் வைத்தோர்செங்குந்த சிலாக்கியரே.

என்று திருக்காஞ்சி முத்தமிழ்ச்சூரிய வீரபத்திர தேசிகர் திருவாய் மலர்ந்த 'செங்குந்தர் சிலாக்கியர் மாலை' திருவிருத்தத்தானும் இவர் செங்குந்த மரபினரே யாவரென்பதில் யாதொரு ஐயமில்லையா மென்க.

இவர் பிறந்த நாடு இன்னதுதான் என்று திடமாகச் சொல்ல முடியாமற் போனாலும் வஞ்சி, திருச்செங்காட்டாங்குடி, துறையூர் எனும் தலங்களில் வசித்தவர் என்பது 'வஞ்சிப் பொய்யா மொழி' என்ற நச்சினார்க்கினிய ருரைப்பாயிரத்தானும்,

பொதியிலகத் தியனைப் பொய்யா மொழியாய்
அதிகையம ரப்பர்க் காளாய்த்—துதிபெருகு
செங்காட்டுக் கோட்டந் துறையூரெனும் தலத்துச்
சங்காத்தங் கொண்டிருப்பாய் தாம்.

என. தமிழ் நாவலர் சரிதையானும் நன்கு விளங்குகின்றதன்றே.

இவர் சிறுபருவத்திலேயே கடவுளருள் பெற்றுச் சாலவும் பாடவல்ல ஆற்றலுடையவரானார். இவர் மதுரையில் பாண்டியன் அனுமதி பெற்றுத் தமிழ்ச் சங்கத்தை உயிர்ப்பிக்க வேண்டுமென்ற கருத்துடன் அவ்வூரை நோக்கிப் புறப்பட்டனர். இடையில் திருச்



சிராப்பள்ளியை அடைந்து அங்கு சில நாள் தங்கியிருந்தபோது சிவபெருமான் அவர் முன் புலவர்வேடம் புனைந்து,

கேட்டாற் கொழும்பிரசங் குத்திய தனடுவே
பாட்டாற் பனைக்கை புகபடுக்கும்—காட்டானை
தேனீ ருருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை.

என்று தாமுவந்த பதி இஃது என்பதைப் புலவர்க்கு அறிவுறுத்த அவர் பெரிதும் வியந்தவராய் மலைமேல் திருக்கோயில் கொண்ட சிவபெருமானை வணங்கி தான் செய்த குற்றத்திற்கு அஞ்சி,

அங்கம் புலியதளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க்கிடம்பனை வாளெயிற்று
வெங்கட்புலியை விட்டியானையைத் தேடிவிதம் விதமாய்ச்
சிங்கமிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.

என்று துதித்து அதனை விட்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டு இடையில் பாலைவனத்தைக் கடந்து பெரிதும் இளைப்புடன் வருவா ராயினர். அச்சமயம் முருகன் ஒரு வேடுவ வுருக்கொண்டு வந்து அப்புலவரை இன்னாரென்றறிந்து தன்பெயர் முட்டை என்ப தையும் சுரம் போக்குத்துறையும் அமைத்து ஒரு வெண்பா பாடுதி என்று கட்டளை யிட்டார். அதற்குப் பொய்யாமொழிப் புலவர்,

பொன்போலும் கள்ளிப்பொறி பறக்கும் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு.

என்று பாட முகப்பெருமான் அதிலுள்ள பொருட் குற்றத்தை எடுத்துக்காட்டி, தான்

விழுந்துளி யந்தரத்தே வேமென்று வீழ்ந்தால்
எழுந்தசுடர் வருமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினள்
பொய்யா மொழிப் பகைஞர்போல்.

என்று பாடி தன் உண்மை யுருவத்தைப்புலவர் கண்டுமகிழ வெளிப் படுத்தி அவர் நாவில் தம்வேலால் எழுதி அனுக்கிரகித்துச் சென் றருளினர். இதனை,

முற்றித்திரி வெற்றிக் குருபர
முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப் பெயர் செப்பிக்கவிபெறு — பெருமாளே.

என்று அருணகிரியாரும் தமது திருப்புகழில் பாடினர். மார்க்க சகாயதேவரும் திருவிரிஞ்சைப் பிள்ளைத் தமிழில்,

பொய்யாமொழிப் புலவர் மதுரையிற் சங்கம்
புரக்க வெழுநாள் மறவனைப்
புறவுறவனைத் தெனதுபெயர் முட்டை பாடெனப்
'பொன் போனு' மென்றுபாட
வெய்யான பாலைக்கி தேலாது நம்பெயர்
விளம்பென விளம்ப வவர்மேல்
'விழுந்ததுளி யென்றெ டுத்துப்பாடி யவர்நாவில்
வேல்கொடு பதித்த சதுரா'.

என்று இக்கதையினைக் குறிப்பிட்டனர். இவ்வாறு பாலைவனத்தைக் கடந்து இடையிலுள்ள பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருக் கானப்பேர் என்னும் ஊரை யடைந்தனர். அங்கு புலவருக்கு நடுநிசியில் பசி அதிகரிக்க கூத்தாள் என்ற தாசிவீட்டை அடைந்து அவளும் அவள் குடும்பத்தினரும் குருடிகளாகி வருந்துவதைக் கண்டு இரங்கி,

கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீலம்—மூத்தாடன்
அன்னை முகத்தி லரவிந்த மன்னைதன்
அன்னை முகத்தி லிரண்டப்பு.

என்று பாட அவர்களுக்கு முன்போல் கண்கள் நன்குகத் தெரிந்து தம் இயற்கையழகு சிறக்க விளங்கி புலவர் பெருமானைப் புகழ்ந்து உபசரித்தனர். பின்பு, அங்குள்ள எழுபது தாசிகள் புலவரது அருள் பெற்று எழுபதினுயிரம் பொன் கொடுத்துப் பாடல் பெற்றனர்.

பலகாலங்கழித்து மறுபடியும் அவர் கூத்தாள் வீட்டையடைய அவர்கள் உபசரியாமை கண்டு பழைய குருடிகாள்! கதவைத் திறவுங்கள் என்று கூற, முன்போல கண்புலன் கெடத் தாசிகள் காரணத்தை உணர்ந்து அவரடியில் வீழ்ந்து குற்றம் பொறுக்கவேண்டி அவரருள் பெற்று மீண்டும் கண்புலனடைந்து வாழ்ந்து வந்தனர்.

பின்பு புலவர் திருக்கானப்பேரை விட்டு நீங்கி மதுரையடைந்து பாண்டியன் மந்திரியாய் புலவர் சகாயனுயுள்ள தஞ்சை வாணனைக் கண்டு அவன்மீது புகழ்ந்து 'தஞ்சை வாணன் கோவை' என்று ஓர் அரிய நூல் இயற்றினர். இது திருச்சிற்றம்பலக்கோவையாரை யடுத்து பழமை பெருமைகளாற் சிறந்து விளங்குவது என்பது பேரறிஞர் முடிபாகும். தஞ்சை வாணன் இக்கோவையின்



சொன்னயங்களைப் பலபடச் சுவைத்து ஆனந்த மேலீட்டால் பாடலொன்றுக்கு ஒவ்வொரு தேங்காயளவு பொன்னளித்து உபசரித்தான். புலவர் பாண்டியனை முதன்மையாகக் கொண்டு மதுரைச் சங்கம்கூட்ட வெண்ணிய தம் கருத்தை அவனுக்கு எடுத்துரைக்கப் பாண்டியனிடம் சென்றனர். அப்போது பாண்டியன் இவரது ஆற்றலை உணராதவனுய் இச்சங்கத்தாரது திருவுருவங்களெல்லாம் சிரம் அசைக்கும்படி ஒருபாடல்இயற்றவல்லீரேல்இறந்த சங்கத்தை நீர் எழுப்பவல்லீர் நாம் என்றுகூற உடனே புலவரும் ஒருப்பட்டு,

உங்களிலே யானொருவ னொப்பேனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழென் பன்னாலு மேற்குமோ
ஏடவிழ்தா ரேழெழு வீரின்று.

என்றுபாட அப் புலவர் திருவுருவங்களெல்லாம் சிரமசைத்தன. பாண்டியன் அதிசயமடைந்து சங்கப் பலகை மிதக்கும்படி செய்ய வேண்டுமென்று வேண்ட அவ்வாறே அதையும் செய்து காட்டினர். பாண்டியன் புலவர்பால் அச்சமுற்று குற்றம் பொறுக்க வேண்டினன். பின்பு பாண்டியன் மதுரைச் சங்கத்தைப் புலவரைக் கொண்டு கூட்டினன். இப்புலவரைத் தலைமையாகக் கொண்ட சங்கத்தில்தான் திருத்தக்கதேவரால் சீவகசிந்தாமணி அரங்கேற்றப்பட்டது என்பது 'வஞ்சிப் பொய்யா மொழி' புகழ்மையறுகாட்சித் திருத்தகு முனிவன்' என்ற நச்சினர்க்கினிய ருரைப்பாயிரத்தானறிக.

பிறகு எக்காரணம் பற்றியோ மதுரையையும் சங்கத்தையும் விட்டு நீங்கி சோணுடு அடைந்து தமிழருமை யறிந்த பெருங்கொடைவள்ளலும் சிற்றரசூர், குருகாவூர் முதலான ஊர்களுக்குத் தலைவனுமான சீநக்கன் என்னும் சீமானைக்கண்டு அவன் உபசரிக்க தன் பசி வாட்டத்தை அவன்பிரியமாய் அளித்த புளியஞ்சோற்றை உண்டு ஒழித்து,

அளிகொளுந் தொடை யன்னா சைக்குமன்
ஒளிகொள் சீநக்கனின் று வந்திட்ட சீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே.

என்றுபாட அது முதல் அச்சீமான் அப்புலவரின் அருமை பெருமைகளை யுணர்ந்து பிரியாத தோழமை பூண்டான். இப்பிரபு மூலமாக புலவரும் சோழவரசனை அடைந்து பல பரிசில்கள் பெற்று சீநக்கனோடு முன்போல கலந்து வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் கண்டியூரிலிருந்து ஒரு வண்ணத்தி புலவர்க்குப் பெருமகிழ்ச்சி தரும்படி அவராடைகளை மாசு நீக்கி வெள்ளையாக்கிக் கொடுத்து உபசரித்தமைக்கு உவந்து 'தூசு தூசாக்குவார்' என்ற தொடக்கத்துப் பாடலைப்பாடி அவளைப் புகழ்ந்தனர். பின் குலோத்துங்கச் சாவகன் என்ற ஒரு புலையன் புலவர்க்குப் பெருங்கோபமுண்டாம்படியான கொடுமையொன்றுசெய்ய அது பொறுக்காத புலவர் 'கோதில் குல மங்கை' என்று வசைபாட அப்புலையனுடல் வெடித்து ஒழிந்தான்.

இவ்வாறு புலவர் சீநக்கவள்ளலுடன் புகழ வாழ்ந்து வரு நாளில் ஓர் இரவில் சீநக்கன் துயில்கொள்ளும் கட்டிலிலே அவனும் பொய்யாமொழியாருமாக விருந்து நெடுநேரம் அளவளாவிக் கொண்டிருக்கையில் புலவர் சீநக்கனை போஜனத்துக் கனுப்பிவிட்டு அயர்ச்சி மிகுதியால் அச்சயனத்திலே படுத்துறங்கி விட்டனர். சீநக்கன் போஜன முடித்துக்கொண்டு உலாவச் சென்றனன். அவன் மனைவியும் கட்டிலில் படுத்துறங்குகின்றவரைத் தன் கணவரென்று எண்ணி அதிலே ஒருபுடையில்படுத்து நித்திரைபோயினள். சீநக்கன்முறைப்படி அங்கே படுக்கப்போக கட்டிலில் புலவருடன் தன்மனைவிபடுத்திருத்தலைக்கண்டு 'இஃது என் மனைவியின் அறியாமையால் நிகழ்ந்தசெயல்' என்று ஒரு சிறிதும்சினம்கொள்ளாது புலவரைத்தட்டி எழுப்பி அச்சயனத்தில் தனக்கும் கொஞ்சம்இடம் கொடுக்கும்படி வேண்டினன். புலவர் விழித்தெழுந்து தம்முடன் சீநக்கன் மனைவி படுத்திருந்ததையும் சீநக்கன் தன்னை இடம் வேண்டி அவள் பக்கலில் துயிலுறுதலையும் கண்டு திக்பிரமை கொண்டு சடேலென விலகிநின்றார். இவற்றையுணர்ந்து புலவரைச் சாந்தப்படுத்தி புலவர் பால் முன்னிலும் பன்மடங்கு நேசமிக் குடையனாய்த் திகழ்ந்தான். அடுத்தநாள் இச்செய்தி ஊர்முழுதும் பரவிநிந்திக்க அதனைக் கேட்டபுலவர்,

"தேரையார் தெங்கிள நீருண்ணார் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரை வாய்பொன் சொரியும் கொற்றவன்தன் கண்டி
யூரைவாய் மூடவுரை யறிந்தோ மில்லையே"

என்று பெரிதும் இரங்கிக்கூறினார். ஆயினும் சீநக்கவள்ளல் இவ ரொழுக்க வுயர்வுகளை நன் கறிந்தவனாதலால் உடல் வேறும் உயி ரொன்றுமாகப் புலவருடன் கலந்து களித்துவந்தான்.

இவ்வாறிருக்க இவர்களிருவரின் உத்தம நட்பைக்கண்டு சகியாத நமன் சீநக்கனது ஆருயிர்க்கு இறுதி தேடவும் அவ்வள்ளல் உடனிருந்த புலவர் பெருமானைவிட்டு வானுலகு அடைந்தனன்.



புலவரும் தாம் வேறு அவன் வேறு என்று எண்ணாத பெருந்தகையாதலால் அவனது பிரிவிற்கு ஆற்றாதவராகி அவனுக்கென்று மூட்டப்பட்ட எரியில் அவனுடன் விழுந்துயிர் துறப்பதே நலமென்று எண்ணி,

"அன்று நீசெல்லக் கிடவென்றாய் ஆருயிர்விட்
டின்று நீவானுலக மேறினாய்—நன்று நன்று
வானக்க பூண்மடவார் மாரனே கண்டியூர்
சீநக்கா செல்லக்கிட"

என்ற அருமைப்பாடலை இயம்பிஅவனுடன் தீப்பாய்ந்து உயிர்நீத்து அவனோடு வானுலகு அடைந்தனர்.

---

# கவி இன்பம்.

(சென்னை, தொண்டை மண்டலம் துளுவவேளாளர் உயர்கலாசாலை ஆசிரியர் அ. தம்பிரான் முதலியார் அவர்கள்)

(கடந்த திங்களின் தொடர்பு.)

**இன்பம்:**—இன்பம் பலவகைப்படும். ஒவ்வோர்புலனாலுமனுபவிப்பது ஒவ்வொரு இன்பமாகும். அவ்வின்பம் யாவும்அனைத்தையும் அடக்கிச் செலுத்தும் மனதிற்கே பயன்செய்வனவாம். செவிப்புலனாலே அறியும் இன்பம் காரணமாக பலவிதமானமெய்ப்பாட்டையும் அறிகின்றோம். அத்தகை இன்பங்களில் கவியிலுள்ள இன்பம் எத்தன்மைத்து என ஆராயின் எல்லாப் புலன்களுக்கும் ஒரேகாலத்தில் கழிபேருவகை யூட்டுகின்ற இன்பத்தைத் தரும் தன்மைத்து செய்யுள் என அறியக்கிடக்கின்றோம். அத்தகை இன்பந் தருவதற்கு கவியிலுள்ள சிறப்பியல்கள்யாவை? அவை:— சொல்நயம், பொருள்நயம், சந்தம் முதலியனவாம். இவைகளை யெல்லாம் நல்லிசைப் புலவர்கள் நற்றமிழ்ப் பாக்களிலே பரக்கக்காணலாம். அத்தகை யாற்றல் வாய்ந்தவர்களாலே ஆக்கப்பெற்ற பாட்டுகளே இன்பம் பயப்பன. அவ்வகைப் பாட்டுகளில்தான் கவியின்பம் கவிந்திலங்கக்காணலாம்.

"பொன்னின் சோதி போதினின்நாற்றம் பொலிவே போல்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்"

என்று கூறிய கவித்திலகமாம் கம்பரின் கருத்துக்களை ஆராயப்புகின் கவி யின்பத்தின் அளவுக்கும் ஓர் எல்லை யுண்டோ? எனவே, சொல்நயம் பொருந்திய செய்யுட்களே இன்பம் பயப்பன. பொருள்நயம் பொலிந்த பாக்களே இன்பந் தரக்கூடியன. சந்தப் பாக்களே

சந்ததம் இன்பம் பயப்பன. நல்லிசைப் புலவன் வாய்ச் சொற் செய்யுட்களே இன்பம் பயப்பன. ஆகலின் அத்தன்மைத்தான பாக்களை ஆக்கவல்ல நல்லிசைப் புலவர் யாவர் என்பதைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வாம்.

**நல்லிசைப் புலவர்:**— மனம், உலக இயற்கையழகிற் படிந்து அதன் வண்ணமாய்த் திரிந்து தெளிவுற்று விளங்கும்போது அறிவிற் சுரந்து பெருகும் அரிய பெரியகருத்துக்களையே நாம் அறிதற்கு விரும்புகின்றோம். அங்ஙனந் தோன்றும் அரிய பெரிய கருத்துக்களை ஒருங்கே திரட்டி, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னு முத்தியால் ஆக்கப்பெற்ற பாட்டினைப் பாட வல்லவன் நல்லிசைப் புலவன் ஒருவனேயாகும். மற்றும், மக்கள் வாழ்நாள் சத்தும் அசத்துமான அனுபவங்கள் அதிகமாகக் கலப்புற்று நிறைந்து தோன்றும். அக் கலப்பினை நல்லிசைப் புலவன் எனும் அரிப்புக் காரன், மனம் வாக்கு காயம் ஆகிய இம்மூன்று திரிகரணங்களாலும் மிக வருந்தி முயன்று, அக் கலப்பினின்று தள்ளுவன தள்ளி, கொள்ளுவனவாகிய சத்துக்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்துத் தன் மதி நுட்பத்தால் கோவையாகத் திரட்டித் தருவதே பாட்டென்றறிதல் வேண்டும். இன்னும் மக்கள் அறிவு எனும் தேனினு மினிய அரிய அமிழ்தம் பலவகையான குற்றங்களானுங் கலப்புற்றுத் தூயதல்லாததாய்ப் போக, பேரறிவினால் அதனைத் தெள்ளி வடித்து அதன் இன்சுவையினை மிகுதிப்படுத்தி நாமனைவரும் பருகிப் பெரியதோர் ஆறுதலடையக் கொடுப்பவனே நல்லிசைப் புலவன். கோதாவரி நதியை வர்ணிக்கப்போந்த கம்பர்,

"புவியினுக் கணியாய்ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள்தாங்கி ஐந்திணைநெறி அளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்றொழுக்கமுந் தழுவிச்சான்
கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர்கண்டார்." [ரோர்

எனக் கவிலக்ஷணத்தை ஆற்றின்மேலேற்றிச் செஞ்சொற்களால் போற்றிப் போந்தார். தமிழ் மொழிக்கு இலக்கணங் கூற வந்த நன்னூலாசிரியர்,

"சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வனாடியிற் செறித்தினிது விளக்கி"

என்று நல்லிசைப் புலவன் இலக்கணத்தை இலகுவுடன் இயம்புகின்றார். எங்ஙனம் ஓர் சிறிய நிலைக்கண்ணாடி பெரிய பெரிய உருவங்களையும் தன்னிடத்தே அடக்கிப் புலப்படுத்துகின்றதோ அத்தன்மையேபோல் பல ஆழ்ந்த நுண் கருத்துக்களைச் சில எழுத்துக்களாலாய பாட்டைப் பாடுபவரே நல்லிசைப் புலவராவர். உதா



ரணமாகப் பொதுமறையாம் திருக்குறளை வியந்து கூறப்போந்த கபிலர்,

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்."

என்று கூறுமாற்றான் குறட்பா மகிமை நன்கு புலனாம். கல்வியைப் பற்றிக் கூறப்போந்த அதிகாரத்து ஆசிரியர், திருவள்ளுவனார்,

"தாமின்புறுவ துலகின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்."

என்று கற்றறிந்தார் லக்ஷணத்தைக் கணித்துக் கூறுகின்றார். தாம் இன்புறுதற் கேதுவாய கல்விக்கு உலகத்தவர் இன்புறுவதைக் கண்டு அச் சிறப்பு நோக்கிக் கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர். அத்தன்மைத்தான புலமை வாய்ந்த நல்லிசைப் புலவர்கள் Homer, Dante, Shakespeare (ஜெகத்பிரியர்), Milton, Goethe, காளிதாசர், வள்ளுவர், நக்கீரர், இளங்கோ, கூலவாணிகன் சாத்தனார், மாங்குடி மருதனார், கபிலர், சேக்கிழார், கம்பர், மற்றும் கவிவீர சிங்கம் முத்தமிழ் ரத்னாகரம் ம. தி. பானுகவி சுவாமிகள் முதலியோர் ஆவர். மேற் கூறிய புலவர்களால் பாடப்பெற்ற இன்பம் பயக்கும் கவிகள் இரண்டொன்று கூறி முடிப்பாம். குமரகுருபர சுவாமிகள் தாம் பாடிய சிதம்பரச் செய்யுட் கோவையில்,

"அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல்காட்ட
மருஅருக்கன் மதி, வளி, வான், யமானன் தீநீர்
மண்ணெனு மெண்வகையுருப்பின் வடிவுகொண்ட
ஒருவனுக்கு மொருத்திக்கு முருவொன்றாலவ் வுருவை
யிஃதொருத்த னென்கோ வொருத்தியென்கோ
இருவருக்கு முரித்தாக வோருவரென்றே யியற்
சொலிலதெனில் யான்மற்றென் சொல்கேனே".

பிறமொழியிலில்லா இருபாலுங் குறிக்கவல்ல, "ஒருவர்" என்ற அரும் பெரும் பதத்தைப் பிரயோகித்த முறை உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாகும். மற்றும்,

"மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின் மறைத்துடன்
[விடுத்திடுவனேற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுளடக்கிடுவ னித்தனையும் வித்
[தையலவால்"

என்ற கவியில், "புவியனைத்தும் ஓர் இமைப்பினில் மறைத்து உடன் விடுத்தல்", என்றது உலக முழுவதும் ஒரு நொடிப் பொழு

தில் மறையும்படி செய்து மீளவுந் தோன்றும்படி செய்தலென்றும், உலக முழுவதும் கண்ணை இமைக்கின்ற காலத்து மறையும்படி செய்து விழிக்கின்ற காலத்துத் தோன்றும்படி செய்தல் என்றும், "எட்டுவரையைக் கடலை முட்டியுளடக்குதல்", என்றது எட்டுவகை மலைகளையும் எழு கடல்களையும் கைப்பிடியு ளடங்கும்படி செய்தலெனவும், எள்ளையும் துவரையையும் கடலையையும் சிறு மட்பாண்டத்து ளடங்கும்படி செய்தலெனவும் இருவகையில் பொருள் கொள்ளுங் காலத்து அளவிலா இன்பம் தானாகவே மிளிரக் காணலாம். மற்றும்,

"தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந்தாங்கக்
கொண்டல்கண் முழவினேங்கக் குவளைகண்விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினிகாட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுக ளினிதுபாட மருதம் வீற்றிருக்குமாதோ".

என்ற பாவில், சோலையை ஓர்நாடக மேடையாகவும், தோகையை விரித்தாடும் அழகிய மயில்களை நாடகமேடை நடிகர்களாவுகம், தடாகத்தில் மலர்ந்துள்ள செந்நிறம் வாய்ந்த தாமரை மலர்களை வெளிச்சமூட்டும் விளக்குகளாகவும், ஆகாயத்தின்கண் அடர்ந்துள்ளகருமேகங்கள் ஒன்றோடொன்று நெருங்குவதனாலுண்டாகும் இடியின் மெல்லிய சப்தத்தினை மிருதங்கமாகவும், குவளை மலர்களை மருத நிலத்தரசனின் கண்களாகவும், காற்றினியங்குந் தன்மையால் தடாகத் தண்ணீர் கரையை மோதுவதா லுண்டாகும் அலைகளை, திரைச்சீலைகளாகவும், மலரிலுள்ள தேனைப் பிழியும் இனிமையான வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் ஓசையை யாழினுமினிய பாட்டுக்களாகவும் மருத நிலத்தை ஓர் மன்னனாகவும் கற்பனை செய்து கூறிய கவிச்சக்கரவர்த்தியாம் கம்பரின் பொருள் நயசொன்னயங்கள் தான் என்னே! பின்னும்,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே."

என்று செந்தமிழ்நாட்டைச் சிறப்பிக்க வந்த பாரதியார் அமைத்த "போதினிலே" (போது) என்ற பதப்பொருள் நயத்தை நோக்குங்கால் கவி இன்பத்தேன் பாய்ந்தோடுவதை யறியலாம். இன்னும் நாமகளை வழிபடும் நல்ல முறையை அறிய விரும்புவோருக்குப் பாரதியார் நன்கு அறிவுறுத்துகிறார்.

"வீடுதோறும் கலையின் விளக்கம் வீதிதோறும் இரண்டொருபள்ளி
நாடுமுற்றிலும் உள்ளனவூர்கள் நகர்களெங்கும் பலபலபள்ளி
தேடுகல்வியிலாததோரூரைத் தீயினுக்கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கும் அமுதமென் அன்னைக்கேண்மை கொள்ளவழியிவை
கண்டீர்."



என்னும் ஆர்வ மொழிகள் படிப்போர் மனதில் பசுமரத்தாணி போல் பதிவனவாகும். ஒத்தபண்பும் ஒத்த அன்பும் உடைய தலைமகனும் தலைமகளும் ஊழ்வினைப் பயனால் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றித் தாமே எதிர்ப்பட்டு அன்பினால் ஒன்றிடும் உண்மைக் காதலை,

"கண்ணொடு கண்ணிணை நோக் கொக்கின்
வாய்ச்சொற்கள் என்னபயனு மில".

என்ற ஆழ்ந்த கருத்தடங்கிய குறட்பாவால் விளக்கிப் போந்தார் வள்ளுவனார். இப்போது மறைகூறும் உண்மை உணர்ந்த கம்பர்,

"எண்ணரு நலத்தினாள் இனைய நின்றுழி
கண்ணொடு கண்ணிணைகவ்வி யொன்றை யொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."

என்று மிதிலைமா நகரின் அரசமாளிகைக்கன்னி மாடத்தில் நின்ற சீதையும் முனிவருடன் தெருவூடேசென்ற இராமனும் ஒருவரை யொருவர் கண்டு காதலுற்ற நிலையை அழகொழுக எழுதிப் போந்தார். அகத்தினழகு முகத்தில் தெரியும் என்ற உண்மையுணர்ந்த பொய்யா மொழிப் புலவர்,

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்".

என்று பாடிய குறட்கு விரிவுரை செய்வார் போன்ற கம்பர்,

"வண்டுறை யலங்கலாய் வஞ்சர்கண் முகம்
கண்டதோர் பொழுதினில் தெரியும் கைதவம்
உண்டெனின் அஃதவர்க் கொளிக்க ஒண்ணுமோ
விண்டவர் பலபகல் மறுகி வீழ்வரோ".

என்ற கருத்தமையக் கழன்றிருக்கின்றார். பண்டை மன்னன் ஒருவன் தமிழ்ச்சுவை யறிந்தோனாய் நாரையின் வாய்க்குத் தக்க உவமை யாது என்று புலவர் பெருமக்கள் பலரைக் கொண்டும் அறியானாகி இரவில் தமதூரைக் காவல் புரிவான் வேண்டிச் சுற்றி வருங்கால் கங்குற்போதில் வருத்தமுட னமர்ந்திருந்தசத்திமுற்றப் புலவர்,

"நாராய்! நாராய்!! செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்"

என்று பாடிப் புரவலரது ஐயத்தைத் திரிபற நீக்கினரன்றே. மற்றும், மாதர்க்கணிகலனும் மாதவிபால் சுகித்த புணர்ச்சி யின்பத்தைப் பற்றி நலம் பாராட்டிய கோவலன்,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே"

என, கண்ணுக் கினிமையால் மாசற்ற பொன்னை யொப்பாய் என்றும், ஊற்றின் இன்பத்தால் வலம்புரி முத்தை யொப்பாய் என்றும், உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற வாசனையை யொப்பாய் என்றும், சுவையினினிமையால் கரும்பையொப்பாய் என்றும், இனிய மொழியை யுடைமையால் தேனை யொப்பாய் என்றும் திருந்திய மொழியில் பொருந்தக் கூறிய இளங் கோவடிகள் கருத்தையும்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள"

என்ற வள்ளுவனார் கருத்தையும் ஆராயின் அவர்கள் நினைத்த தீரா இன்பம் தெள்ளிதிற் புலனும். மக்கள் உடம்பினியல்பைக் கூறப் போந்த கூலவாணிகன் சாத்தனார்:

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிது......"

என அழகுபட எடுத்துக் கூறியிருக்கின்றார். சுவைவளையிழந்த ஆறுநூற்ற வீரபத்தினியாம் கண்ணகித் தெய்வம், ஆறு மனத்தளாய்த் தீராக் கோபங் கொண்டு,

"பார்ப்பா ரறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க"

என்று காய்த்திய பொற்றொடியின் கற்பு நிலையை யுன்ன உள்ளங் கொதித் தெழுகின்றது. மாலைக் காலத்தை வருணிக்கப் போந்த அருட்பா இராமலிங்க சுவாமிகள்.



"இளவேனின் மாலையாய்க் குளிர்சோலையாய் மலரிலஞ்சிபூம் பொய்கை
யேற்றசந்திரகாந்த மேடையாயதன் மேலிலங்குமா மியவணையுமாய் [யருகா
தளவேயுமல்லிகைப் பந்தராய்ப்பால்போல் தழைத்திடு நிலாக்காலமாய்த்
தனியிளந்தென்றலாய் நிறைநரம்புளவீணை தன்னிசைப் பாடலிடமாய்
களவேசலந்த கற்புடையமடவரல் புடைகலந்த நயவார்த்தையுடனுய்க்
களிகொள விருந்தவர்கள் கண்டசுகநின்னடிக் கழனிழற்சுகநிகருமே"

என செஞ்சொற்களால் நயம்பட உரைத்திருக்கின்றார். நாமார்க்குங் குடியல்லாத் தன்மையனை தம்பிரானருக்கு ஆட்பட்ட தாண்டகவேந்தர், புறச்சமயத்தார் தம்மை நீற்றறையிலிட்டுப் புன்மை இழைத்தங்கால்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே"

என்று நாதனது திருவடியை நம்பிநின்றநிலை உள்ளத்தைக் கவர்ந்து விழுங்குகின்றது. 'நிறைநரம்புள வீணை' என்றும் 'மாசில் வீணை' என்றும் கூறிய இருவர் கருத்தும் மிக அழகியதாகும். மேனாட்டு வைத்திய நூல் வல்லாரும், மாலைக்காலத்து தினகரனும் சந்திரனும் ஆகிய இவ்விருவர் கிரணங்களும் தேக ஆரோக்கியத்திற்குப் பலகாலும் சிறந்தது என்று கூறும் உண்மை பற்றியேதான் சொல்வேந்தரும் 'மாலைமதியமும்' என்றார் போலும். இறைவனை நினைந்து நெஞ்சம் நெக்குருகி அப்பெருமானது இணையடிநீழலை யடைந்து இன்புறக் கருதும் பெரியார் சிற்றறிவும் சிறுதொழிலும் வாய்ந்த தம்மைத் தலைவியராகவோ அல்லது அனைத்தினும் கீழ்ப்பட்ட ஒன்றாகவோ கருதியும் எண்ணரிய நலம் வாய்ந்த இறைவனைத் தலைவனாகக் கருதியும் அன்பினாற்கூறும் இன்பமொழிகள் அருந்தமிழ் நூல்களில் சிறந்து விளங்கக்காணலாம். நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் இறைவனை 'உள்ளங்கவர்கள்வன்' என்றுபாடும் பான்மை இதற்கோர் எடுத்துக் காட்டாகும். திருவோத்தூர் திருநாவுக்கரசு மடத்ததிபராயிருந்தவரும், 'தத்புருஷசிவம்' என்று தீக்ஷா நாமம் பெற்றவரும், நூலாசிரியரும், உரையாசிரியருமாயிருந்தவருமான சைவ ஸ்ரீ முத்தமிழ்ரத்நாகரம் ம. தி. பாநுகவி சுவாமிகள் அவர்களியற்றிய இன்பந்ததும்பும் நூல்கள் பல. அவைகளில்,

"கோவாய்முடுகிவருங் கூற்றங்குலைய வருள்செய் கொழுநனுடன்
கூடியெனது மனமரத்திற் குடிபுக்கமர்ந்த பசுங்கிளியே
காவாயென்னை யெனவேண்டிக் கரையுந்தோறு மருட்கண்ணால்
கனிந்துபார்த்தின் னருள்செய்யுங் கமலாசனியே கதிர்மறை
பாவாயின்ப பஞ்சரமாய்ப் பயிலுமாயை மனுவிலுறை [சைப்

186951

பண்ணார் குயிலே நினையன்றிப் பணியேன் பிறதெய்வதமென்
மூவாமுதலா வுலகீன்ற முதல்வி முத்தந் தருகவே [றும்
முளரிக்கண்ணார் தமைமுகிழ்த்த முதலேமுத்தந் தருகவே"

எனவரும் கவியுள், அம்பேபோன்று 'கடுகடுத்து வரும் கூற்றம்' என்றும், கோபாவேசத்தோடு கடுகடுத்து வரும்கூற்றம் என்றும் பொருள்படும்படி,

"கோவாய்முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவாரடிச் சுவடென்மேற் பொறித்துவை"

என்று நாவரசர் நவின்றகருத்தமைய 'கோவாய் முடுகிவருங் கூற்றம்' என்றதும், அக்கூற்றுவன் அழிந்துபடப் பாலன் மார்க்கண்டனுக்காகக் காலனைக் காலாலுதைத்தருள் கனிந்த கணவனுடனே எனது மனமாகிய மரத்தில் பசுங்கிளியின் நிறத்தையும் மொழியையும் அழகையும் உடையவளாகிய நீவருதல் வேண்டும், என்றதும், மரம் என்று தம்மைத் தாழ்த்தியும், அம்மையை அம்மரத்தில்குடிபுகும் தத்தை யென்றும் இன்னிசை நிறைந்த குயில் என்றும் உயர்த்தியும் கூறிவழிபாடாற்றும் முறைமிக்க அழகுடைத்தாகும். திருந்திய மொழிகளாலமைந்த திருக்கோவை யாரில் இறைவனை நாயகனாக அமைத்து அகத்துறை அழகுகள் எல்லாங் கனிந்து ஒழுகுமாறு பாடப்பெற்ற பாடல்கள் அன்பின் விளைவாய நல்லின்பம் பயப்பனவாகும். இறைவனது இணையிலா எழிலினைக் கண்டும் ஆனந்தத் தேனை உண்டும் அவனது சிறப்பைக் கேட்டும் மலரினுமினிய மணத்தை உயிர்த்தும் இளங்காற்றின் இனிமையை நுகர்ந்தும் இன்புற்ற பெரியார், 'யான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக' என்றபடி அவ்வின்பத்தைப் பிறவுயிரும் பெற்றுய்யுமாறு பல துறைகளிலும் பாடி மகிழும்பான்மை கற்போர் உள்ளத்தைப் பேரின்பத்தில் திளைப்பிப்பதாகும்.

இத்தகை பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிய மணிவாசகப் பெருந்தகையார் (இசைஇன்பம் நிறைந்தஇளங்) குயிலை விளித்துப் பேசும் முறைசாலச் சிறந்ததாகும்:

"கீதமினிய குயிலேகேட்டியே லெங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவிற் பாதாளமேழினுக் கப்பாற்
சோதிமணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
யாதிகுண மொன்றுமில் லானந்தமிலான் வரக்கூவாய்"

என்று குயிலின் வாயிலாகத் தலைவனைத் தன்னிடத்தே வரவழைக்கக் கருதுகின்றார். எனவே, தமிழன்னையின் சீரியதனயர்களே! நம்நாட்டு இத்தகை நல்லிசைப் புலவர் பெருமக்கள் தம் நாவால் நம் செவியமுதாய் வார்த்துள்ள நற்றமிழின்பத்தை நனி நுகர்ந்து நலனடை வீர்களாக.

உ

# பிரதோஷ மகிமை.

---

(திருவல்லிக்கேணி வேதாகமோக்த சைவ சித்தாந்த சபைத் தலைவர்
திரு, நல். கண்ணப்ப முதலியாரவர்கள்.)

ஒருகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலில் மந்தர மலையை மத்தாக நட்டு, ஆதிசேஷனை நாணாகப்பூட்டிக் கடையும்போது அக்கடலில் பஞ்ச தருக்களும், இலக்குமியும் சந்திரனும் வெள்ளையானையும், மற்று மநேகமான திரவியங்களு முண்டாயின. இவற்றையெல்லாம் தேவர்கள் கிரகித்துக் கொண்டார்கள். அப்போது ஆதிசேடன் உபத்திரவம் பொறுக்காமல் விஷத்தினைக் கக்க அவ்விஷம் எப்பக்கத்திலும் வீசச் சமீபத்திலிருந்த விஷ்ணுமூர்த்தி கறுத்துவிட்டனர். சிறிது தூரத்திலிருந்த பிரமா புகைநிறமாயினர். உடனே தேவர்கள் பயந்து சிவபெருமானைநோக்கி முறையிட அவர் மனமிரங்கி அவ்விஷத்தினைக் கடுகளவாக்கித் திருவமுது செய்தருளிக் கண்டத்தி னிறுத்திக் கொண்டனர். இவ்விஷமுண்டான காலம் ஏகாதசியாகும். அவ்விரவு முழுவதும் தேவர் முதலானோர் நித்திரையினின்றும் நீங்கி சிவபிரானைப் பூசித்து மறுநாள் பாரணை செய்த காலம் துவாதசியாகும். அடுத்தநாள் திரயோதசியன்று இரஜனிமுகவேளை அதாவது மஞ்சள்வெயில்காய்கிறசாயுங்காலம்பிரதோஷ காலம் "சங்கரன்சூழலஞ்சுழன்று நடித்தனன் ஓர் சாமம்சதுமறைநூலதுபிரதோடமெனவே சாற்றும்". இப்பிரதோஷ காலத்தில் தேவர்கள் முதலியவர்கட்கு இடபவாகனரூடராய்ச் சூலஞ் சுழற்றி யொருசாமம் திருநடனஞ் செய்து அனுக்கிரகித்த தென்றும், அஸ்தமித்த மூன்றே முக்கால் நாழிகையாகிய பிரதோஷ காலம் பரார்த்த சிவதரிசனத்திற்குப் பரியாய பட்சகாலமெனவும் சொல்லப்படும். இப் பிரதோஷ கால நிர்ணயமானது சிவாலயங்கட்கும், சிவதரிசனம் பண்ணுகிறவர்களுக்கும், விரதமனுட்டிப்பவர்கட்கும், ஆத்மார்த்த பூசை பண்ணுகிறவர்கட்கும் விதித்திருக்கின்றது. பிரதோஷ காலத்தில் பிரம விஷ்ணு முதலிய தேவர்களெல்லோரும் சிவபெருமான் சந்நிதியிலிருப்பார்களாகையால், அந்த வேளையில் சிவபெருமான் ஆலயத்தை யன்றி வேறு ஆலயத்திற்குப் போகிறவர்கள் நரகத்தினையே யடைவார்கள். விநாயகர், சுப்பிரமணியர், அம்பாள் இவர்கட்கும் சிவபெருமானுக்கும் சிறிதும் பேதமின்மையால் இவ்வாலயங்கட்குப்பிரதோஷ காலத்தில் போய்தரிசிக்கலாம். இப் பிரதோஷ காலத்தில் சிவாலயத்தில் ஒரு தீபமேற்றி வைக்கின்றவர்களடையும் பலனை அம்மம்ம! ஆதிசேடனாலும் சொல்ல முடியாதெனின் அநேக தீபமேற்றி வைப்போர் அடையும் பலனை யாரெடுத்துச் சொல்ல வல்லவர். அச்சிவமாகவே விளங்குவார்களல்லது வேறில்லை. பிரதோஷகாலத்தில் நந்தியம் பெருமானுருக்கு ஒரு மாலையிடுவோர் சிவசாயுச்சிய மடைவர். பிரதோஷ காலத்தில் நந்தி தேவராகிய இடபதேவருடைய இரண்டு கொம்புகளின் மத்தியில் சிவலிங்க தரிசனஞ் செய்தல்வேண்டும். விஷமுண்ட காலம் சனிக்கிழமையானதினால் சனிப் பிரதோஷம் மிகுந்த சிறப்புடைத்து. பிரதோஷ காலத்தில் சோம சூக்கிரமாகப் பிரதட்சணஞ் செய்யவேண்டும்.

அதாவது முதலில் நந்திதேவரைத் தரிசித்துக்கொண்டு, அங்கிருந்தவண்ணமே இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்துச்சென்றவழியே திரும்பிவந்து மறுபடி நந்திதேவரைத்தரிசித்து பின்பு சிவலிங்க தரிசனஞ் செய்யவேண்டும். இவ்வாறு ஒரு பிரதட்சணம் செய்தால் அனந்த பலனுண்டு. இவ்விரதத்தினை எக்காலமும் அனுஷ்டித்து வருபவனுக்கு மறுசென்மமில்லை. பிரதோஷத்தினைத் தன்னாலியன்றளவு திரவிய சகாயத்தால் நடத்துபவரும், அதற்கு உதவிசெய்பவரும், அக்காலத்தில் தீபம்வைப்பவரும், அக்காலத்தில் தரிசிப்பவரும் ஒரு சிவாலயத்தினை நூதனமாகப் பிரதிஷ்டை செய்ததனாலுண்டாகிய பெரும் புண்ணியத்தினை யடைவார்கள். இத்தகைய அருமையான உயர்ந்த பிரதோஷத்தினுக்கு இடையூறு செய்பவர்கள் அடையும் கதியினை இவ்வளவெனச் சொல்லி முடியாது; கோடானுகோடி காலம் நரகத்தில் வீழ்ந்து துன்பத்தையே யனுபவிப்பர். ஒருவனுக்கு நல்ல மனைவி வேண்டுமாயினும், புத்திரர் வேண்டுமாயினும், செல்வம்வேண்டுமாயினும் பிரதோஷ தரிசனமே செய்து வரல்வேண்டும்.

இப்பிரதோஷம் சுக்கிலபட்சம் திரயோதசியாவது, கிருஷ்ணபட்சம் திரயோதசியாவது உதயாதி உதயாந்தம் அறுபது நாழிகை யிருப்பது உத்தமம்; உதயாதி முப்பது நாழிகை யிருப்பது மத்திமம்; உதயாதி இருபத்தாறேகால் நாழிகைக்குமேல் ஒரு வினாடியாவது இருப்பது அதமம்; துவாதசி கலந்து வருகிற திரயோதசி அதமாதமம். துவாதசி கலந்த திரயோதசி யென்பது முதனாள் துவாதசி முப்பது நாழிகைக்குமேல் திரயோதசி பிரவேசித்து மறுநாள் இருபத்தாறேகால் நாழிகை யிருக்குமேயானால் முதனாள் பிரதோஷ கிரியைகள் நடத்தவேண்டியது. ஒருவேளை மறுநாள் உதயாதி இருபத்தாறேகால் நாழிகைக்குமேல் ஒரு வினாடி நாழிகையாவது இருக்குமேயாகில் அன்றையதினமே நடத்தவேண்டியது. திரயோதசி உதயாதி இருபத்தாறேகால் நாழிகை முதல் இராத்திரி மூன்றேமுக்கால் நாழிகை வரைக்கும் நாழிகை ஏழரை. இந்த நாழிகை ஏழரையில் ரஜனிமுக காலத்தில் சம்பவிக்கும் பிரதோஷகாலத்தினை யொப்புக்கொள்ள வேண்டியது. நாள் ஒன்றிற்கு முகூர்த்தம் பதினாறு; இவற்றுள் மத்தியான முகூர்த்த மெட்டு; மத்தியான முகூர்த்த மெட்டில் உதயாதி முதல் ஏழு முகூர்த்தத்தைக் கழித்து எட்டாவது முகூர்த்தம் பிரதோஷ காலமாம். இந்த முகூர்த்த மூன்றேமுக்கால் நாழிகையை மூன்று பிரிவாகப் பிரிக்கப் பிரிவு ஒன்றுக்கு நாழிகை ஒன்றேகால் இம் மூன்று பிரிவுகளில் முதற்பிரிவிற் பிரதோஷம் நடத்துவது உத்தமம்; இரண்டாம் பிரிவில் நடத்துவது மத்திமம்; மூன்றாவது பிரிவில் நடத்துவது அதமம். இம் மூன்று பிரிவினால் உண்டாகும் பயன் ஒன்றற்கொன்று பேதித்ததல்ல பிரதோஷமென்றால் முற்பவத்திற் செய்த தோஷ நிவாரணம். அல்லது இராத்திரியின் முன்காலம் அதாவது இரஜனிமுகவேளை மஞ்சள்வெயில் காய்கிற சமயம்.

இப்பிரதோஷம் துவாதசிதிதி $26\frac{1}{4}$-நாழிகைக்கு (மாலை $4\frac{1}{2}$ மணிக்கு) மேல் திரயோசிதிதி வந்தாலும் அன்றைக்கே அனுஷ்டிக்கவேண்டும்.

பிரதி அமாவாசைக்கும், பௌர்ணமிக்கும் மூன்று நாளைக்கு முன்னே வரும் திரயோதசிதிதியே பிரதோஷதினமாம்.



பிரதோஷ விரதமும், தரிசனமும் அனுஷ்டிப்பவர்கள் சிவாலயங்கள் இல்லாத இடங்களில் இருக்கும்படி நேர்ந்தால், வில்வமரம், வில்வதளம், உருத்திராக்கம், விருஷபமணி, தேவாரத் திருமுறை ஆகியவைகளையும் பூசிக்கலாம் மாலைப் பொழுதில் வானத்தில் தோன்றும் அந்திவண்ணனுடைய சிவந்த நிறத்தையும் தரிசிக்கலாம். இறைவனாகிய சிவபெருமான் விஷ முண்டமையைத் திருமுறைகளிலும், பிரம்மோத்தர காண்டத்துள் பிரதோஷ மகிமை உரைத்த அத்தியாயத்திலும், காமிக ஆகமத்திலும் மிக விரிவாய்க் காணலாம்.

## சிவசந்நிதானத்தில் திருநந்தி தேவர் வேண்டிய பதினாறு பேறு.

மறைக ணிந்தனை சைவநிந் தனைபொறு மனமும்
தறுக ணைம் புலன்களுக் கேவல் செய்யுறாச் சதுரும்
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்.

யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாத வத்தினோ ரொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் யுறுதியு மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும்.

மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவி லும்முன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு முரைத்திடும் பொலிவும்.

தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மையாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்
ஏமு றும்பர தாரநச் சிடாதநன் னோன்பும்
தூய்மை நெஞ்சின்யா னெனதெனுஞ் செருக்குறாத் துறவும்.

துறக்கமீ துறையினு நரகிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும விவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.

---

# சுலோக பஞ்சக விஷயம்.

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

(சிவபரத்துவ நிரூபண சிகாமணி
பொன்னேரி, திரு, தி. மா. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள்.)

1. காயத்ரீ வல்லபத்வாத். உயர்கா யத்திரிக் குரிப்போரு ளாகலின்.

பொருள்:— மந்திரங்களுக்குள் மேலான காயத்திரி மந்திரத்துக்குச் சொந்தமான அர்த்தமாய் விளங்கலானும் என்பது.

காயத்திரி மந்திரம்:—'தத்ஸவிதுர்வ ரேண்யம்பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ரசோதயாத்' என்பது.

அதன் பதவுரை:—ய:—எவன், ந:—நம்முடைய, திய:—புத்திகளை, ப்ர—நன்ருக, சோதயாத்—நடத்துவானே, தத்—அந்த, ஸவிது:—சூரியனிலுள்ள, பர்க:—பர்க்கனுகிய, தேவஸ்ய—தேவனுடைய, வரேண்யம்-மகிமையை, தீமஹி-தியானிப்போம் என்பது.

அதன்கருத்து:— சூரியனிடத்தில் ஒரு தேவனிருக்கிருன். அவன்பெயர் பர்க்கன். அப்பர்க்கதேவனை நாம் தியானிக்க வேண்டும் என்பது.

பங்கஜம் என்னும் பெயரையுடைய வல்லிக்குப் பங்கஜவல்லி என்ற பெயர்வந்தபடி, பர்க்கன் என்னும் பெயரையுடைய தேவனுக்குப் பர்க்கதேவன் என்ற பெயர்வந்தது.

இதனுல் காயத்திரியின் உபாசியப்பொருள் ஸவிதாவுமன்று தேவனுமன்று பர்க்கனேயாம் என்பதுகாண்க.

இனி, ஆராய வேண்டுவது அந்தப் பர்க்கப்பெயர் சிவபிரானுக்குரியதா பிறதேவர்க்குரியதா என்பது. வேதத்தின் ஞானபாகமாகிய உபநிஷத்துக்களே அவ் வாராய்ச்சியைச் செய்துள்ளன. மைத்திராயண் காயத்திரி மந்திரத்தை மூன்று பாதங்களாகப் பிரித்து உரைசெய்துவிட்டு அதிலுள்ள பர்க்கப் பெயருக்கும் 'அத பர்க...... பர்காக்ய.......பர்கா இதி ருத்ரோ ப்ரஹ்ம வாதிந:' என்ற பகுதியில் பர்க்கன் என்னும் பெயருடையான் உருத்திரன் எனப் பிரமவாதிகள் சொல்லுகிருர்கள் என்று தெளிவாக உரைவகுத்திருக்கிறது. 'பர்காக்ய' என்று பர்க்கநாமம் சிவபிரானுக்கு ரூடிப்பெயராகவே அதில்வருதல் காண்க. அப்பால் அவ்வுபநிஷத்துத்தானே 'அதபர்க இதி பாஸயதீமாந் லோகாந் இதி ரஞ்சயதீமாநி பூதாநி கச்சத இதி கச்சத் யஸ்மிந் நாகச்சத் யஸ்மா இமா: ப்ரஜாஸ்தஸ்மாத் பாரகத்வாத் பர்க:' (இனிப் பர்க்கனென்றது ப—உலகங்களை விளக்கி நிற்போன். ர—எல்லாவுர்களுக்கும் பிரீதியினைப்போன். க—எல்லாவுயிர்களையும் அடக்கி வெளிப்படுத்துவோன். ஆகலின் பர்க்கனெனப்படுகிருன்) என்றுகூறி அப்பர்க்கச்சொல் அவனுக்கான யோகத்தையும் விளக்கிற்று. அதனுல் அப்பெயர் அவனுக்கு யோகரூடியுமாதலறிக. வடமொழி வியாகரணம் பெரும்பாலும் யோகரூடியையும் ரூடியென்றே சொல்லிவிடும். திரிபுராதாபிநி 'பா: சிவ:......பர்க உச்யதே' (பாசிவன் பர்க்கனென்று சொல்லப் படுகிருன்), 'பர்கோதேவஸ்யதீத்.......சிவாத்மாக்ஷரம் கண்யதே' (பர்கோதேவஸ்ய என்ற வாக்கியத்தால் சிவனை ஆத்மாவாகவுடைய அக்ஷரம் சொல்லப் படுகிறது) என்கிறது. வடமொழிநிகண்டுகளும் அன்னசுருதிகளையநுசரித்தே 'பர்கஸ்த்ரயம்பக:' 'ஹர: ஸ்மரஹரோ பர்க:' எனப் பர்க்கச்சொல்லைச் சிவநாமமாகப் படித்தன. (வரும்)



# மதிப்புரை மஞ்சரி.

நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயருரையும்:—பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல்மூலமும் சங்கர நமச்சிவாயருரையும் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர், உயர்திரு. உ. வே. சாமிநாதையரவர்களால் பரிசோதித்து நூதனமாக எழுதிய பல வகைக்குறிப்புக்களுடன் சென்னை லாஜர்னல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்ற இரண்டாம் பதிப்புப்புத்தகம் தமிழ்மக்களின் தவப்பயனாக வையகம்மதிக்கும் ஐயரவர்கள் அன்புடன் அனுப்பியுள்ளார்கள். இதில் நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி; பிழையும் திருத்தமும்; முகவுரை; பவணந்திமுனிவர் வரலாறு; சீயகங்கன்வரலாறு; நூல்; சங்கரநமச்சிவாயர் வரலாறு; ஆகியவைகள் 36-பக்கங்களும், நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும்; நூற்சிறப்புப்பாயிரம்; உரைச்சிறப்புப்பாயிரம்; பொதுப்பாயிரம்; எழுத்ததிகாரம்—எழுத்தியல்; பதவியல்; உயிரீற்றுப்புணரியல்; மெய்யீற்றுப்புணரியல்; உருபுபுணரியல்; சொல்லதிகாரம்-பெயரியல்; வினையியல்; பொதுவியல்; இடையியல்; உரியியல்; ஆகியவைகள் 438-பக்கங்களும், எழுத்ததிகாரப் பொருளடைவு; சொல்லதிகாரப் பொருளடைவு; எழுத்ததிகார இயல்களின் சூத்திரத்தொகை; நன்னூற் சூத்திரமுதற் குறிப்பகராதி; விளங்கா மேற்கோள் அகராதி; ஆகியவைகள் 10-பக்கங்களும், அரும்பத முதலியவற்றின் அகராதி 80-பக்கங்களும் ஆக (கிரௌன்டிம்மி 1-க்கு 8-) 564-பக்கங்களுடன் காலிக்கோக்கட்டிடமுள்ளது. "வடநூற் கடலையும் தென்றமிழ்க்கடலையும் நிலைகண்டுணர்ந்த ஸ்ரீசிவஞான யோகிகள் இருமொழிக்கண்ணும் தாம் ஆராய்ந்தறிந்த அரியவிதிகளை அமைத்தற்குத்தக்க இடமென்று இவருரையைக் கொள்வராயின் சங்கர நமச்சிவாயருடைய பெருமையைக் கூறவல்லவன்யானே?" என உரையாசிரியரைப் பற்றி இதன் பதிப்பாசிரியராகிய தமிழகப் பெரியாரே கூறுகின்றனர். ஆகலின் வேறு எவர்தான் இவ்வுரையின் பெருமையையும் எந்நூற்கும் இலக்கண வரம்பாகிய இந்த நன்னூல் மூலத்தின் பெருமையையும் இயம்பவல்லார்!

"எந்நூற்கு மெழுத்தொடுசொற் பொருளறிசங்
கரநமச்சி வாயனென்னும்
பன்னூற் செந்தமிழ்ப் புலவன்"

"முன்னூற்கு மலயமுனி தன்னூற்கும் புவியிடத்து
முதியோ ராற்சொல்
எந்நூற்குந் தமிழ்க்கடலு ளினியியற்று
நூற்கும்வகை இதனுற்காட்டி
நன்னூற்கு விரித்துரைசெய் தான்"

எனவரும் உரைச்சிறப்புப்பாயிரத்தானே உரையின் சிறப்பையும் மூலத்தின் சிறப்பையும் ஒருவாறு உணரலாம்.

இம்மூலத்தையும் உரையையும் எழுத்தெண்ணியாய்ந்து நூதனமாகப் பலவகைக் குறிப்புகள் எழுதிப்பதித்த அந்தண சிரேஷ்டரின் செந்தமிழ்த்திறனை யாவரே கணித்தறிவர்!

அவர்கள் மெய்வருத்த மாதியவற்றைப் பொருட்படுத்தாது கருமமேகண்ணாக அரும்பெரும் நூல்கள் பலவற்றை உலகோபகாரமாகப் பதிப்பித்துதவியவாறே இந்நூலையும் பதிப்பித்துதவிய நன்றியைப் பாராட்டுதலும் படித்துப் பயனுறுதலுமே தமிழ்மக்களின் தனிப்பெருங் கடமையாகும். இப்புத்தகத்தின் விலை ரூபா மூன்று. சென்னை, திருவேட்டீசுரன் பேட்டை, தியாகராஜ விலாசத்தில், மகாமகோபாத்தியாய, டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்களுக்கு எழுதிப்பெறலாம்.

**ஈழகேசரி ஆண்டுமடல்:**— யாழ்ப்பாணம் சுன்னாகத்திலிருந்து ஐந்தாண்டுகளாக ஒவ்வொரு ஞாயிற்றுகிழமைதோறும் வெளிவரும் புதினத்தாள் நிலையத்திலிருந்து யுவ ஆண்டுத் தொடக்கத்தில் செந்தமிழ்ப் பாட்டும் உரையுந்தீட்டிவெளியிட்ட செய்வெண் மடல் ஒன்று வரப்பெற்றோம். முன்னுரை முதல் முதியவர் நினைவுக் குறிப்புவரை 35 உள்ளுறைகளையும் உயர்திரு, ஆறுமுக நாவலரவர்கள் முதலான சைவ மெய்யன்பர்கள்; பெரியார்கள்; தமிழ்ப்பேரன்பர்கள்; தமிழ்ப்புலவர்கள்; தமிழ்ப்புரவலர்கள்; தனவந்தர்கள்; தேசபக்தர்கள்; தேசியத் தலைவர்கள்; எழியமக்கள்; ஏழைகள் செய்தொழில்கள்; திருக்கோயில்கள்; கோபுரங்கள்; தெய்வமூர்த்தங்கள்; தேர்கள்; எழிலுடைய மாளிகைகள்; தெருக்களாதிய 50 நிழலுருவப்படங்களையும், பிறவிளம்பரங்களையும் தாங்கி (டிமி 1-க்கு 4-ல் ஒயிட் ஆர்ட்) பளபளப்புள்ள தாளில் 100 பக்கங்களுடன் அழகுற மிளிர்கின்றது. உள்ளுறைகள் யாவும் வீரசமும் இன்பரசமும் வீறிப்பெருகுகின்றன. சிரமாலையும், புண்டரம் பூத்த நுதற்பொட்டழகும், அருள் பொழியும் இருவிழிகளும், குழையணி செவிகளும் புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும் பொருந்திய திருமுகப்பொலிவுடன் வெண்ணீறணி மேனியராய்செம்பட்டாடையணிந்துமார்பகத்தில்கௌரீசங்கரம்விளங்கஅழகியகரதலங்களில்திருமுறைதாங்கி சுகாதனத்துடன்புட்பாலங்கிருதமாளிகையில் பூவணைமீது விளங்கும் உயர்திரு ஆறுமுகநாவலரவர்களின் சைவத் திருக்கோலத்தைப் பார்க்கப் பார்க்க அன்புமீதூர இன்பம் ததும்புகின்றது. முருகவேள், திருமகள் திருவுருவங்களும் ஏனைய நிழலுருவங்களும் காண்டற் கினியனவே. இவ்வளவு சிறப்பினதாகிய ஆண்டு மடலை அழகுபடுத்தி வெளியிட்டு நயனொடு நன்றி புரிந்த பயனுடையாராகிய ஈழகேசரிப்பத்திராதிபர் திருவாளர், நா. பொன்



னையா அவர்களின் தமிழ்ப்பற்று, சைவப்பற்று தளராவூக்கமாதிய பண்பைப் பாராட்டுவது தம்முலகத்தாரது கடனாம். இவ்வாண்டு மடல் விலை சதம் 50. யாழ்ப்பாணம் மயிலிட்டி தெற்கு, திருமகள் நிலையத்திலும் "ஈழகேசரி" புதினத்தாளில் வெளியிட்டுள்ள பிறவேறிடங்களிலும் பெறலாம். இனிவரும் ஆண்டு மடலில் தமிழுக்குத் தக்க தொண்டாற்றும் திருவாளர், நா. பொன்னையா அவர்களின் நிழலுருவமும் மிளிர வேண்டுதும்.

**திருமுறை சாத்திரங்கள்:**— இது திருமுறைகளின் பெருமை, சாத்திரங்களின் பெருமை ஆகியவைகளை விளக்குவது காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத்தினரால் பதிப்பித்து திருவேகம்பர் திருவிழாவில் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. வேண்டுவோர் காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை 400 நெ. கடையில் சைவத்திருவாளர் அ. தாந்தோணி முதலியாரவர்களிடம் இலவசமாகப் பெறலாம்.

**திருப்பரங்கிரி மும்மணிக்கோவை:**— இது தேவகோட்டை திருவாளர், வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியாரால் தமது இருபதாம் ஆண்டு நிறைவின் அறிகுறியாக இயற்றியது. இதற்கு முன்னரும் ஒவ்வோராண்டின் அறிகுறியாகச் சில பல நூல்கள் இயற்றியுள்ளார். இது திருப்பரங்குன்றமர் சேயைப் போற்றி ஆசிரியப்பா; நேரிசை வெண்பா; கட்டளைக் கலித்துறை ஆகியவைகளால் முப்பது செய்யுட்களுடன் காப்புச் செய்யுள் இரண்டும் வாழ்த்தும், தாமியற்றியநடராஜர் நவமணிமாலை; குமரகுருபரசுவாமிகள் போற்றித்திருவகவல்ஆகியஇரண்டும்சேர்த்துப்பதிப்பித்துவெளியிட்டுள்ளார். செய்யுட்களின் சீரிய அமைப்பைச் சிறப்பித்து, தேவகோட்டை சிவாகம சங்கத்து சித்தாந்த போதகாசிரியர் திருவாளர், பொ. முத்தைய பிள்ளை யவர்கள் முதல் நால்வரின் சாற்றுக்கவிகளுண்டு. இவர் கவித்திறம் பெறுதற்கு கோநகர் கற்பகவிநாயகர் கலாசாலையும் ஞானசம்பந்த நற்சபையும் திருவருளும் உறுதுணையாய் நின்றன. சுப்பிரமணியர் சுவாமிநாதராகையால் ராமசுப்பிரமணியன் எனும் இவர் பெயர் இராமநாதன் என வழங்குதல் பொருத்தமே. இவர் மனத்திற் குகந்த மனைவியை மணந்து இல்லறத்தை இனிது நடாத்தி நன்மக்கட்பேறுடன் வளம்பலபெற்று நெடிதுவாழவும் செந்தமிழ்க்கலையைச் சிறப்புடன் போற்றவும், திருப்பரங்கிரிவாழ் செவ்வேள் திருவருள் புரிவாராக.

**தஞ்சை பெரியகோயில்:**— தஞ்சைத் தளிக்குளம் என திருநாவுக்கரசர் தேவாரத்தில் விதந்தோதப்பெற்ற சிவகெங்கைத் திருக்குளக் கரையில் கருவூர்த் தேவர் திருவிசைப்பாவும் அருணகிரிநாதர் திருப்புகழும்பெற்றுச் சிறந்துவிளங்கும், பிருகந்நாயகி சமேத

பிரகதீசுவரர் திருக்கோயில் வரலாறுகளை விளக்கி, தஞ்சை அரண்மனை தேவத்தானங்களின் அறநிலையப் புரவலராகிய திருவாளர் J. M. சோமசுந்தரம் பிள்ளை B. A. B. L. அவர்களால் எழுதிப் பதித்து வெளியிட்ட "பெரிய கோயில்" என்னும் புத்தகம் வரப் பெற்று மகிழ்வுற்றனம். இப்புத்தகத்தால் தெரிந்து கொண்ட அருமைப்பாடுகளைச் சிறப்பித்து கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர், தமிழ்ப்புரவலர், திருவாளர், த. வே. உமாமகேசுவரம்பிள்ளை B. A. B. L. அவர்கள் எழுதிய முகவுரையும், திருக்கோயில்; ஸ்ரீ ராஜராஜ சோழ மன்னர்; ஸ்ரீ கருவூர்த் தேவர்களின் திருவுருவச் சித்திரங்களும் சேர்க்கப்பெற்றுள்ளது. பெருவுடையார் என்பது மாபெருந் தலைவரெனப் பொருளாம். இப்பெருமானுக்கு தில்லைவாழந்தணரால் சிவபாத சேகரன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற இராஜ ராஜ தேவர் எனும் சோழமன்னர், தம் பெயர் விளங்க இராஜ ராஜேசுவரம் எனும் இத்திருக்கோயில் திருப்பணி செய்த காலமும் பிற அருமை பெருமை பலவும் விளக்கியிருக்கின்றார்கள். பெரிய கோயில்கோபுரமும் பெரியநந்தியும் உலகில் சிறந்தகாட்சிப்பொருள்களில் சேர்த்து எண்ணப்பெறுவன. இக்கோபுரம் தக்ஷிணமேரு உத்தம விமானம் என்ற வழக்காறும், 216 அடி உயரமுடைமையும், இதன் உச்சியில் பிரமரந்திரத்தளம் உ௫ அடி சதுரமும் ௮௰ டன் நிறையும் உள்ள ஒரேகருங்கல் நாலுமயிலுக்கப்பால் சாரப்பள்ளம் என்னும் காரணப் பெயர் பெற்ற கிராமத்திலிருந்து சாரம்போட்டு ஏற்றப்பெற்றதும், பெரிய நந்தி பன்னிரண்டு அடி உயரமும் பத்தொன்பதரை அடி நீளமும் எட்டேகாலடி அகலமும் ஒரே கல்லாக உடைமையும், பெருவுடையார் அருட்டிருமேனி (சிவலிங்கம்) நருமதை நதிதீரத்திலிருந்து கொண்டு வந்தமையும், மருந்திளகிப் பந்தனமாகாமை கண்டு வருந்திய மன்னன் விண்ணொடு மொழிகேட்டு யோகநாதரென்னும் யோகியார் ஓலை எழுதிக் காக்கையின் காலிற் கட்டி விடுக்க, கருவூரார்வந்து மருந்து பந்தனம் செய்த தவவலிமையும், சிற்பநுட்பம் நித்திய நைமித்திகமாதிய திட்டங்கள்; கல்வெட்டுகள்; ஓவியச் சிறப்புகள் முதலாம் பலவரலாற்றையும் முறைப்படுத்தித் தெளிவுற விளக்குகின்றது. திருமுறைகளை ஓதுவார் நாற்பத்தெண்மர்; உடுக்கைகொட்டிமத்தளக்காரரிருவர்; உருத்திரகணிகையர் நானூற்றுவர்; ஆரியகானம் பாடுவோர் பலர் எனக் குறிப்பிட்டிருத்தலை நோக்க இதனாற்றான் தஞ்சையில் சங்கீதக்கலை வீறி விளங்கியதென அறியக் கிடக்கின்றது. பெரிய கோயிலின் அரிய செய்திகளை எழிதில் உணர வெளியிட்ட இப்புத்தகத்தைப் பெற்று யாவரும் படித்தறியவும் பிள்ளையவர்கள் பெரிய கோயிலுக்கு ஆற்றும் திருத்தொண்டுகட்கு அன்பர்கள் இயன்ற துணை புரியவும் வேண்டுகிறோம். இப் புத்தக விலை அணா இரண்டு.

---



(இ - ள்.) மட்டு உலாம் மாலையாய் - தேன்பொருந்திய மலர்மாலையையுடையவனே! அட்டமாசித்தி முதல் அனைத்து உள்ளபேறுகளும் - அட்டமாசித்தி முதலாகக் கூறப்படும் எல்லாப்பேறுகளும், கட்டமாம் கதிகள் தரும் - பிறந்திறந் துழலுந் துன்பமாகிய நிலைகளைத்தரும், பரகதிகாண கொடா - இவற்றிற்கு மேலான நிலையை அடையச் செய்யா, வியாபகமாய் அறிவாகி கிட்டலாகாமுத்தி இவற்றால்கிடையாது - எங்கும் நிறைந்ததாயும் அறிவாயும் எளிதில் அடைதற்கு முடியாததாயும் உள்ள முத்தியை இவற்றால் அடைய முடியாது எ - று.

(பொ - ரை.) தேன் பொருந்திய மலர் மாலையை உடையவனே! அட்டமாசித்தி முதலாகக் கூறப்படும் எல்லாப்பேறுகளும், பிறந்திறந் துழலுந் துன்பமாகிய நிலைகளைத்தரும்; இவற்றிற்கு மேலான நிலையை அடையச் செய்யா. எங்கும் நிறைந்ததாயும் அறிவாயும் எளிதில் அடைதற்கு முடியாததாயும் உள்ள முத்தியை இவற்றால் அடைய முடியாது எ - று.

(க - ரை.) சித்தி முதலியன பிறப் பிறப்புக்களைத் தருமேயன்றி முத்தியைத்தாரா என்பதாம்.

சித்தி முதலியவற்றால் முத்தி கிடையாதென்பது கூறுதற்பொருட்டு, மேலைச் செய்யுளிற் கூறப்பட்டதை அநுவதித்தார். கஷ்டம் என்பது கட்டம் எனத் திரிந்தது.

மற்று. ஏ. இரண்டும் அசை. (ருச)

(அ - கை.) ஞானசாதகன் விடயம் முதலியவற்றில் தனக்கு விருப்பம் உண்டாயின் அவ்விருப்பத்தைத் தடுத்துக்கொள்வான் எனக் கூறுகின்றார்.

55. யாதொரு விடயந் தன்னா லவத்தையை யெய்தினாலும்
காதலால் யோகந் தன்னைக் கருதுவான் பிறிதோர் தேசம்
தீதிலாப் பீடந் தன்னிற் சிறப்புடைத் தெனினுஞ் சித்தந்
தாதர வடையு மாசை யடையாம லாக்கிக் கொள்வான்.

(இ - ள்.) காதலால் யோகம் தன்னை கருதுவான் - விருப்பத்துடன் சிவயோகத்தை அநுட்டிப்பவன், யாது ஒரு விடயம் தன்னால் அவத்தையை எய்தினாலும் - யாதானும் ஒரு விடயங்காரணமாக சலனத்தை அடைந்த காலத்தும், பிறிதோர் தேசம் தீதிலாப்பீடம் தன்னில் சிறப்பு உடைத்து எனினும் - மற்றொரு இடமும் குற்றமில்லாத மற்றொரு ஆதனமும் தானிருக்குமிடத்திலும் ஆதனத்திலும் சிறப்பினை உடையதாகக் காணப்படினும், சித்தத்து ஆதரவு அடையும் ஆசை அடையாமல் ஆக்கி கொள்வான் -

மனத்தின்கண் விருப்பத்தாலுண்டாகும் ஆசை உண்டாகாதவாறு செய்து கொள்வான் எ - று.

(போ - ரை.) விருப்பத்துடன் சிவயோகத்தை அநுட்டிப்பவன், யாதானும் ஒரு விடயம் காரணமாக சலனத்தை அடைந்த காலத்தும், மற்றொரு இடமும் குற்றமில்லாத மற்றொரு ஆதனமும் தானிருக்குமிடத்திலும் ஆதனத்திலும் சிறப்பினை உடையதாகக் காணப்படினும், மனத்தின்கண் விருப்பத்தாலுண்டாகும் ஆசை உண்டாகாதவாறு செய்துகொள்வான் எ - று.

(க - ரை.) ஞான சாதகன், விடயம் முதலியவற்றைப் பற்றி மனத்தினிடத்து விருப்பத்தா லுண்டாகும் ஆசையைத் தடுத்துக்கொள்வான் என்பதாம்.

தேசம் பீடம் முதலிய அனைத்தும் அறியப்படும் விடயமே எனினும், அவத்தைக் கேதுவான சத்தம் பரிசம் ரூபம் இரதம் கந்தமென்பனவற்றை விடயமென வேறு பிரித்துக் கூறினரென அறிக.

அவத்தை - இவ்விடத்து சலனமடையும் நிலையைக் குறித்தது. சலனமாவது - வேண்டாமென்று விட்ட விடயத்தை ஆசையினால் மீண்டும் பொருந்த எண்ணிச் சாதனத்தில் நின்றும் நழுவுதல்.

யோகந் தன்னை என்றவிடத்து, தன் - அசை.

கருதுவான் - பெயர்.

ஆதரவு - விருப்பம். அஃதாவது இது எனக்கு வேண்டுமென்று எண்ணுதல். அவா, விருப்பம் என்பன ஒரு பொருட் சொற்கள். அவ்விடத்து ஆலுருபு விரித்துரைக்க.

ஆசை - விரும்பப்பட்ட பொருளைப் பெறுதற்கான வழியை நாடுதல். இக்கருத்தினை, † எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட் செல்லும் ஆசையும் எனப் பரிமேலழகர் கூறுமாற்றானும் அறிக. (௫௫)

(அ - கை.) ஞானசாதகன் தாவரம் ஊர்வன முதலாகவுள்ள எல்லாவுயிர்களிடத்தும் கிருபை உடையனாயிருக்க வேண்டுமெனக் கூறுகின்றார்.

56. அளியமர் குழலாய்வீட் டை யடையவே கருது நல்லோர்
நெளிவன பறப்ப வூர்வ நிற்பன முதலவாகிக்
களியுடை யுயிர்க்குத் துன்பங் காண்கிலா வாழ்க்கையாறு
லளியினா லருளையென்று மாக்குவ தழகி தாமால்.

† திருக்குறள் மெய்யுணர்தல். செ. ௪௦.



(இ - ள்.) அளி அமர்குழலாய் - (இயற்கை மணம் உடைமையால்) வண்டுகள் விரும்பி மொய்க்கும் கூந்தலை உடையவளே! நெளிவன பறப்ப ஊர்வ நிற்பன முதல ஆகி - நெளிவனவாகிய புழுமுதலியனவும் பறவையும் ஊர்வனவும் நிற்பனவாகிய தாவரங்களும் முதலியனவாய், களி உடை உயிர்க்கு - (தத்தம் பிறவியில்) மகிழ்ச்சியினை உடைய உயிர்கட்கு, துன்பம் காண்கிலா வாழ்க்கை ஆனால் - துன்பம் செய்யாமை இல்வாழ்க்கையாகும் ஆயின், வீட்டையே அடைய கருதும் நல்லோர் - முத்தியினையே அடைய விரும்பும் ஞான சாதகர்கள், என்றும் அளியினால் அருளை ஆக்குவது அழகிது ஆம் - எக்காலத்தும் அன்பினால் உயிர்களிடத்துக் கிருபை வைப்பது சிறப்பாகும் எ - று.

(போ - ரை.) இயற்கை மணம் உடைமையால் வண்டுகள் விரும்பி மொய்க்குங் கூந்தலை உடையவளே! நெளிவனவாகிய புழுமுதலியனவும் பறவையும், ஊர்வனவும், நிற்பனவாகிய தாவரங்களும் முதலியனவாய்த் தத்தம் பிறவியில் மகிழ்ச்சியினை உடைய உயிர்கட்குத் துன்பம் செய்யாமை இல்வாழ்க்கையாகுமாயின், முத்தியினையே அடைய விரும்பும் ஞானசாதகர்கள், எக்காலத்தும் அன்பினால் உயிர்களிடத்துக் கிருபைவைப்பது சிறப்பாகும் எ - று.

(க - ரை.) ஞானசாதகன், உயிர்களிடத்து எக்காலத்தும் அன்பினால் கிருபை உடையவனாக இருக்கவேண்டும் என்பதாம்.

முதல என்றதனால் மிருகம் நீர்வாழ்வன மனிதர் என்பனவுங் கொள்ளப்படும்.

ஒவ்வொரு உயிரும் தான் தங்குதற்கு இடனாயிருக்கும் உடலை விட்டு நீங்குதற்கு விருப்பமில்லாமல் அவ்வுடல் நீங்குங் காலத்து வருந்துதலாலும், எவ்வித இடையூறும் பொருந்த விரும்பாமையாலும், தத்தம் பிறவியில் மகிழ்ச்சியினை உடையதென்பது பெறப்படுமாறு காண்க.

காண்கிலா என்றவிடத்துமை விகுதி தொக்குநின்றது.

காண்குதல் - செய்தலென்னும்பொருள் குறித்தது.

வாழ்க்கை யென்பது அடையடுக்காது நின்றமையால், இல்வாழ்க்கையினைக் குறிக்கும். இது, வாழ்க்கைத் துணைநலம் என்னும் திருக்குறள் அதிகாரப் பெயரானும் அறியப்படும்.

இல்வாழ்க்கை யென்பது எவ்வுயிரிடத்தும் அன்புடைமையை முதன்மையாகக் கொண்டு நிகழுமென்பது பற்றியே, திருக்குறளில் இல்லற இயலுள் அன்புடைமை முதலாவதாகக் கூறப்பட்டது. தாவரங்களை உணவாகக் கொள்ளினும், பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் என்னும் ஐவகையாகங்கள் இல்வாழ்வார்க்கு விதிக்கப்பட்டமை

பற்றி, தாவரவுயிருக்கும் துன்பஞ் செய்யாமையே இல்வாழ்வார்க்குக் கருத்தென்பது பெறப்படும். தீவினையச்சம் என்னும் அதிகாரம் இல்லற இயலுள் திருக்குறளில் வைக்கப்பட்டமையால் இக்கருத்து வலியுறுத்தப்படும். ஆயினும் இல்வாழ்வார்க்குத் தாவர வுணவு இன்றியமையாதென்னுங் கருத்துப் பற்றி இன்னா செய்யாமை, கொல்லாமை, புலால் மறுத்தல் என்னும் அதிகாரங்கள் துறவற இயலுள் வைக்கப்பட்டன.

ஆனால் என்பது தெளிவின்கண் வந்தது; * "அச்செயலானால" என்றவிடத்துப் போல.

அளி - அன்பு. அருள், அன்பு காரணமாக நிகழுமாதலின், அளியினால் அருளையாக்குவது என்றார்.

ஈற்றிலுள்ள ஆல் - அசை. (௫௬)

(அ - கை.) ஞானசாதகன் சிவபூசை செய்யும் முறையைக் கூறுகின்றார்.

57. நடுங்காம லெவ்வுயிரு நறுக்காமற் றுரும்பனைத்தும்
பிடுங்காது முதலெவையும் பிரசமலர் கொய்யாது
விடுங்காலா லூழ்த்துதிர்ந்த விரைமலர்க ளவையேந்தி
அடுங்காலன் றனையட்ட வம்புயங்க ளருச்சிப்பான்.

(இ - ள்.) எவ்வுயிரும்நடுங்காமல் - ஒருயிருக்கும் அச்சந்தரும் செயலைச் செய்யாமல், துரும்பு அனைத்தும் நறுக்காமல் - துரும்புகளைக் கிள்ளாமல், முதல் எவையும் பிடுங்காமல் - வேர்தளைகளைப் பிடுங்காமல், பிரசமலர் கொய்யாது - தேன் பொருந்திய மலரைப் பறியாமல், ஊழ்த்துவிடும் காலால் உதிர்ந்த - மலர்ந்து வீசுங் காற்றால் உதிர்ந்த, விரைமலர்கள் அவை ஏந்தி - மணமுள்ள மலர்களை யெடுத்து, அடும் காலன்தனை அட்ட அம்புயங்கள் அருச்சிப்பான் - உயிர்களைக்கொல்லுங் காலனைக் கொன்ற சிவபெருமானது தாமரை மலர்போலும் திருவடிகளைப் பூசிப்பான் எ - று.

(பொ - ரை.) ஒருயிருக்கும் அச்சந்தரும் செயலைச் செய்யாமல், துரும்புகளைக் கிள்ளாமல், வேர் தளைகளைப்பிடுங்காமல், தேன் பொருந்திய மலரைப் பறியாமல், மலர்ந்து வீசுங்காற்றால் உதிர்ந்த மணமுள்ள மலர்களை யெடுத்து, உயிர்களைக் கொல்லுங் காலனைக் கொன்ற சிவபெருமானது தாமரை மலர்போலுந் திருவடிகளைப் பூசிப்பான் எ - று.

(க - ரை.) ஞானசாதகன், உதிர்ந்த மலர்களை யெடுத்துச் சிவபூசை செய்வன் என்பதாம்.

* சிவஞான சித்தியார் உ-ம் சூ-ம். செ. கக.



இவ்வாசாரம் முடியும்வரை ஞான சாதகன் என்னும்எழுவாய் அதிகாரத்தால் வருவித்து உரைத்துக்கொள்க.

துரும்பு - அறுகு முதலியன.

வேர் - விலாமிச்சை முதலியன.

தளை - மரு முதலியன.

உதிர்ந்த மலரை எடுத்துப் பூசிக்கவேண்டும்; செடியிலுள்ள மலரைப் பறித்துப் பூசித்தல் கூடாதென்று கூறும் முறையில் பூசைக்கு உபயோகமான புல் முதலியவற்றைக் கிள்ளுதல் பிடுங்குதல் கூடாதென்பதையும் உடன் கூறினார்.

பிடுங்காது கொய்யாது என்பன அவ்வத் தொழில் மேல் நின்றன.

அம்புயங்கள் - தாமரை மலர் போலுந்திருவடிகளைக் குறித்தது.

ஞானசாதகன், புறத்தே சிவபூசை செய்யவிரும்பின், உதிர்ந்த மலரை எடுத்துப் பூசிக்கவேண்டுமென்னும் இக்கருத்துப் பற்றியே ‡ "புறம்பேயும் அரன்கழல்கள் பூசிக்க வேண்டின் பூமரத்தின் கீழுதிர்ந்தபோதுகளும் கொண்டு.........போற்றி" என ஸ்ரீ அருணந்திசிவாசாரியர் அருளிச் செய்வாராயினர்.

அவ்வாறாயின், * "அருப்போடு மலர் பறித்திட்டுண்ணா ஊரும்" எனவம், "உண்பதன் முன் மலர் பறித்திட்டுண்ணாராகில்" எனவும் ஸ்ரீ அப்பர் சுவாமிகளும், இக்கருத்துத் தோன்ற வண்டு தேனை உண்பதன் முன் மலரைப் பறித்துப் பூசிக்கவேண்டுமென்று புட்பவிதி கூறும் நூல்களும் கூறிய கருத்தென்னை யெனின், கூறுதும்:—

இறைவனை வழிபடும் முறை ஞானம் கிரியை என இருவகைப்படும். இவ்விரண்டும் அன்பின்றிச் செய்யப்படுமாயின் பயன்றரமாட்டா. ஆயினும், மந்ததரம், மந்தம் என்னும் அன்புடன் கிரியா வழிபாடு நிகழும். தீவிரம், தீவிரதரம் என்னும் அன்புடன் ஞானவழிபாடு நிகழும். ஆகையால் அன்பு வழிபாடு எனத் தனித்துக் கூற வேண்டுவதில்லை. ஆயினும் ஞான வழிபாட்டில் அன்பு மேம்பட்டுத் தோன்றும். கிரியாவழி பாட்டில் அன்பு உட்பட்டுத் தோன்றும்.

ஞான வழிபாட்டில் காயமே கோயில்; ஆன்மாவே லிங்கம்; மனமே வேலை செய்யும் அடிமை; மனத்தின்கணிகழும் வாய்மையே திருவலகிடுதல் முதலியவற்றா லுண்டாந் தூய்மை; நிறைந்த நேயமே (தீவிரதர அன்பே) நெய்யும் பாலுமாய்ப் பொருந்த அபிசேகித்தலாகும்.

‡ சிவஞான சித்தியார் கூ-ம் சூ-ம். செ. கக.

* தேவாரம். பொது.

கிரியா வழிபாட்டில் கோயில் முதலிய அனைத்தும் புறத்துக் காணப் படுவனவாம்.

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள், ‡ "காயமே கோயிலாகக் கடிமனமடிமையாக - வாய்மையே தூய்மையாக மனமணியிலிங்கமாக - நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டிப் - பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே" என ஞானவழிபாட்டையும், 0 "நிலைபெறுமா றெண்ணுதியேனெஞ்சே நீவா நித்தலு மெம்பிரானுடைய கோயில்புக்குப் - புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் - தலையாரக்கும்பிட்டுக் கூத்துமாடி சங்கராசய போற்றி போற்றி யென்றும் - அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீயென்றுமாரூரா வென்றென்றே அலறா நில்லே". எனக்கிரியா வழிபாட்டின் பகுதியாகிய சரியாவழிபாட்டினையும் கூறி, மேற்கூறியவாறு மலர்பறித்து வழிபடுதலைக் கிரியா வழிபாடாகக் கூறியருளினார். சரியாவழிபாடு கிரியாவழிபாட்டின் பகுதியாயவாறு போல, யோகவழிபாடு ஞானவழிபாட்டின் பகுதியதாகும். இந்தயோக வழிபாடு ¶ "உடம்பெனு மனையகத்து வுள்ளமேதகழியாக - மடம்படு முணர் நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி - யிடம்படுஞானத் தீயா லெரிகொள இருந்து நோக்கில் - கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே" என அருளிச் செய்யப்பட்டது.

ஆகவே, ஞானவழிபாடு செய்பவன் புறத்துப்பூசைசெய்யின், உதிர்ந்த மலரை யெடுத்துப் பூசிக்கவேண்டு மெனவும், கிரியாவழிபாடு செய்பவன் மலரைப் பறித்துப் பூசை செய்யவேண்டுமெனவும், புட்பவிதியும் கிரியா வழிபாடு பற்றிக் கூறப்பட்ட தெனவும் அறிந்துகொள்க. (௫௭)

(அ - கை.) ஞானசாதகன், மாரணம் முதலியவற்றை விரும்புதல் கூடாதெனக் கூறுகின்றார்.

58. பிணக்கந் தம்பனை பேர்த்த லுயிர்க்கொலை
இணக்கம் பூத பசாசுவெப் பேற்றுதல்
புணர்க்கு வசியம் போனார்வ ரன்மையல்
வணக்கந் தாவரங் குத்திர மாற்றுவான்.

(இ - ள்.) பிணக்கம் - பகைக்கும்படி செய்தலாகிய வித்துவேடணமும், தம்பனை - கட்டுதலாகிய தம்பனமும், பேர்த்தல் - விலக்குதல் ஏவுதலாகிய உச்சாடனமும், உயிர்க்கொலை - மந்திரத்தால் கொல்லுதலாகிய மாரணமும், பூத பசாசு இணக்கம் வெப்பேற்றுதல் - பூதபசாசுகள் ஆவேச

‡ தேவாரம். பொது. திருநேரிசை.
0 ஷை திருவாரூர். தாண்டகம்.
¶ ஷை பொது. திருநேரிசை.



மாகும்படி செய்தலும் சுரநோய் பொருந்தச் செய்தலுமாகிய பேதனமும், புணர்க்குமையல் - புணர்ச்சி செய்வதற்கு மயக்குதலாகிய மோகனமும், வசியம் வணக்கம் - வசப்பட்டு வணங்கச் செய்தலாகிய வசியமும், போனார் வரல் தாவரம் - போனவரை வரச் செய்து மீட்டும் போகாதவாறு நிலைக்கச் செய்தலாகிய ஆகருடணமும் ஆகிய, குத்திரம் மாற்றுவான் - வஞ்சகச் செயல்களை ஞான சாதகன் விரும்பான் எ - று.

(பொ - ரை.) பகைக்கும்படி செய்தலாகிய வித்துவேடணமும், கட்டுதலாகிய தம்பனமும், விலக்குதல் ஏவுதலாகிய உச்சாடனமும், மந்திரத்தால் கொல்லுதலாகிய மாரணமும், பூத பசாசுகள் ஆவேச மாகும்படி செய்தலும் சுரநோய் பொருந்தச் செய்தலுமாகிய பேதனமும், புணர்ச்சி செய்வதற்கு மயக்குதலாகிய மோகனமும், வசப்பட்டு வணங்கச் செய்தலாகிய வசியமும், போனவரை வரச் செய்து மீட்டும் போகாதவாறு நிலைக்கச் செய்தலாகிய ஆகருடணமும் ஆகிய வஞ்சகச் செயல்களை ஞானசாதகன் விரும்பான் எ - று.

(க - ரை.) ஞானசாதகன், வஞ்சகத் தொழிலாகிய அட்ட கருமங்களைச் செய்யான் என்பதாம்.

புணர் - முதனிலைத் தொழிற்பெயர். கு - வேற்றுமை உருபு.

தாவரம் - நிலைத்தல்.

குத்திரம் - வஞ்சகம். (௫௮)

(அ - கை.) ஞானசாதகன், விருப்புவெறுப்பின்றிச்சமநிலையில் நிற்பன் எனக் கூறுகின்றார்.

59. ஆசையினை யறவிட்டெப் பொருட்குமொத்துச் சுகதுக்கம்
பேசியநட் டார்பகைஞர் பீடுடையோர் பீடில்லோர்
மாசிலொளி வளருமணி காஞ்சனங் கல்லோட்டினினும்
நேசமறப் பார்த்துணர்ந்து சமநிலத்தே நிலைநிற்பான்.

(இ - ள்.) சுகதுக்கம் - சுகத்தினிடத்தும் துக்கத்தினிடத்தும், பேசியநட்டார் பகைஞர் - கலந்து உரையாடும் நண்பரிடத்தும் பகைவரிடத்தும், பீடுடையோர் பீடு இல்லோர் - பெருமையுடையாரிடத்தும் பெருமையில்லாதாரிடத்தும், மாசு இல் ஒளிவளரும் மணி - குற்றமில்லாத ஒளிமேம்பட்டிருக்கும் இரத்தினங்களினிடத்தும், காஞ்சனம் - பொன்னினிடத்தும், கல் - கல்லினிடத்தும், ஓட்டினினும் - ஓட்டினிடத்தும், நேசம் அற ஆசையினை அறவிட்டு - விருப்பமின்மையால் ஆசையைமுற்றும்ஒழித்து, ஒத்து பார்த்து உணர்ந்து - ஒத்தகருத்துடையனாய்ப் பார்த்தும் அறிந்தும்,

எப்பொருட்கும் சமநிலத்தே நிலை நிற்பான் - பொருள்களனைத்தினிடத்தும் சமமான சிவபரம் பொருளிடனித்திலே நிலைத்திருப்பன் எ - று.

(பொ - ரை.) சுகத்தினிடத்தும் துக்கத்தினிடத்தும், கலந்து உரையாடும் நண்பரிடத்தும், பகைவரிடத்தும், பெருமையுடையாரிடத்தும், பெருமை யில்லாதாரிடத்தும் குற்றமில்லாத ஒளி மேம்பட்டிருக்கும் இரத்தினங்களினிடத்தும், பொன்னினிடத்தும், கல்லினிடத்தும், ஓட்டினிடத்தும், விருப்ப மின்மையால் ஆசையை முற்றும் ஒழித்து ஒத்த கருத்துடையனாய்ப் பார்த்தும் அறிந்தும், பொருள்களனைத்தி னிடத்தும் சமமான சிவபரம்பொருளிடத்திலே நிலைத்திருப்பன் எ - று.

(க - ரை.) ஞானசாதகன், விரும்பப்படும் பொருள்களினிடத்தும் வெறுக்கப்படும் பொருள்களினிடத்தும் விருப்பு வெறுப்பின்றி, எப்பொருளினிடத்தும் சமமான சிவபரம் பொருளினிடத்து நிலைத்திருப்பன் என்பதாம்.

நேசமற ஆசையினை யறவிட்டு எனவும், ஒத்துப் பார்த்து எனவும், எப்பொருட்கும் சம நிலத்தே எனவும் கூட்டுக.

கு - வேற்றுமை மயக்கம்.

இனினும் என்பது எவ்விடத்தும் சென்று பொருந்தும்.

இக்கருத்தினை * "தக்க பிரியாப் பிரியமின்றி யோட்டிற் றபநியத்திற் சமபுத்தி பண்ணிச் சங்கரனோ டொக்க வுறைந்து" எனவும், ¶ "கேடுமாக்கமுங்கெட்ட திருவினர் - ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர் - கூடுமன்பினிற் கும் பிடலேயன்றி - வீடும் வேண்டாவிறலின் விளங்கினர்" எனவும் சிவாநுபூதிச் செல்வர்கள் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்.

சமநிலம் - சிவபரம் பொருள் † "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்னும் பொய்யா மொழியை நோக்குக.

சமநிலத்தே என்ற விடத்து ஏகாரம், பிறிதொன்றைப் பற்ற மாட்டானென்னும் பொருள் குறித்தலிற் பிரி நிலை. (ருக)

(அ - கை.) ஞானசாதகன், உலகப் பொருள்களிடத்து அச்சமும் அதிசயமும் அடையான் எனக் கூறுகின்றார்.

60. யோகி யாகி யொழுகு மியல்பினோன்
போக மாற்றிப் பொருண்மேற் புலன்களை

* சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் செ. உக.
¶ பெரிய புராணம் திருக்கூட்டச் சிறப்பு செ. அ.
† [illegible]க்குறள் கடவுள் வாழ்த்து செ. ச.